விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 55 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 19 செவ்வாய்க்கிழமை (04.09.2012) | பக்கங்கள்: பதினாறு

# பல்கலைக்கழகங்களுக்கு மேலும் 4,928 மாணவர்கள் அனுமதி

## உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவு

2011ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மாவட்ட மற்றும் தேசிய மட்ட புள்ளிகளை எதிர்வரும் செப்டம்பர் 10ஆம் திகதிக்கு முன் வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் நேற்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கும் பரீட்சைகள் திணைக்களத் துக்கும் உத்தரவிட்டது. உயர்தர மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் மேலதிகமாக 4,928 மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்குவது தொடர்பான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முன்மொழிவிற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.


இஸட் புள்ளி பிரச்சினை தொடர்பில் 400க்கும் அதிகமான மாணவர்கள் தாக்கல் செய்திருந்த 7 வழக்குகள் நேற்று உச்ச நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.

பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க உச்ச நீதிமன்ற நீதியரசர்களான, கே.ஸ்ரீபவன், காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் மேற்படி வழக்குகள் பரிசீலிக்கப்பட்ட போதே உச்ச நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

இதன்போது மாணவர்களின் பல்கலைக்கழக தெரிவு தொடர்பில் உள்ள பிரச்சினைக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 4 முன்மொழிவுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

இதில் முதல் தீர்வின்படி மேலதிகமாக 3,675 மாணவர்களையும் இரண்டாவது தீர்வின்படி மேலதிகமாக 3,048 மாணவர்களையும்

02



# அவுஸ்திரேலியா வரும் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப முடியாது

## அவுஸ்திரேலிய அரசாங்கம் திட்டவட்டம்

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு வரும் தஞ்சக் கோரிக்கையாளர்கள் அனைவரையும் இலங்கைக்கே திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியினர் கூறியிருப்பதை அந்த நாட்டின் அரசாங்கமும், அகதிகளுக்காக குரல்கொடுப்பவர்களும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

இலங்கை அகதிகள் அவுஸ்திரேலிய சட்ட முறைமைக்குள் வருவதற்கு முன்னதாகவே, அவர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு ஏதுவாக, இலங்கை அரசாங்கத்துடன் ஆஸ்திரேலியா ஒரு ஒப்பந்தத்தை செய்துகொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சி கூட்டமைப்பு கூறியுள்ளது.

பல இலங்கை தஞ்சக்கோரிக்கையாளர்கள், பொருளாதார நோக்கில் குடியேறுபவர்கள் தான், அவர்கள் அகதிகள் அல்ல என்று எதிர்க்கட்சி துணைத் தலைவரான ஜூலி பிசப் கூறியுள்ளார்.




இலங்கையர்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தஞ்சம் வழங்கினால், இலங்கை அரசாங்கம் தனது சொந்த மக்களையே துன்புறுத்துகிறது என்று தான் பொருள் என்றும்

02

# இன ரீதியான குறுகிய அரசியல் நோக்கங்கள் இனியும் வேண்டாம்

## மட்டக்களப்பில் ஜனாதிபதி

இன ரீதியான குறுகிய அரசியல் நோக்கங்கள் இனியும் வேண்டாம். அனைவரும் ஒன்றிணைந்து கிழக்கைக் கட்டியெழுப்புவோம் என ஜனாதிபதி மகிந்த ரர்ஜபக்ஷ நேற்று மட்டக்களப்பில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெபர் அரங்கில் நேற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றிய அவர், இன, மத, ரீதியாக மக்களைப் பேதப்படுத்த சிலர் முயற்சிப்பதாகவும் மக்கள் அதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாதெனவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வேட்பாளர்களை ஆதரிக்கும் கூட்டம் ஜனாதிபதி தலைமையில்

02

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் இலங்கைப் பிரதிநிதியின் தலைமையில்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பூகோள கால மீளாய்வுக் கூட்டத்தொடருக்கு தலைமை தாங்கும் பொறுப்பு, ஜெனிவாவிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரில் ஜெனிவாவிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையில் இலங்கை சட்டமா அதிபர் திணைக்கள

02

# இலங்கையில் அமைதியே அமெரிக்காவின் நோக்கம்

இலங்கையில் இனிமேல் எத்தகைய தவறுகளும் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும், அமைதியை உறுதிசெய்வதுமே அமெரிக்காவின் நோக்கம் என்று சென்னையில் உள்ள அமெரிக்காவின் துணைத்தூதுவர் ஜெனிபர் ஏ மக்கின்ரயர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட, தீர்மானத்துக்குப் பின்னர், அந்தப் பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் அமைதியை உறுதி செய்வதும், மேற்கொண்டு எத்தகைய தவறுகளும் நடக்காமல் இருக்க உத்தரவாதமளிப்பதும் அமெரிக்காவின் முக்கிய நோக்கம்.

02

# டெசோ தீர்மானங்களை ஐ.நா.விடம் கையளிக்க அமெரிக்கா பயணம்

ஐ.நா பொதுச்செயலர் பான் கி மூனைச் சந்திக்க மு.ஸ்ராலின் தலைமையிலான குழுவொன்று நியூயோர்க் செல்லவுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஈழத்தமிழர்களை மையப்படுத்தி சமீபத்தில் நடந்து முடிந்த டெசோ மாநாட்டின் தீர்மானங்களை கையளிக்கும் நோக்கில் மு.ஸ்ராலின், ரீ.ஆர்.பாலு மற்றும்

02

# யாழ்ப்பாணத்தில் சந்திரிகா



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுத் திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார். இவர் நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டுள்ளார்.

அத்தோடு மணியம் தோட்டப் பகுதியிலுள்ள மீளக்குடியமர்ந்த மக்களைப் பார்வையிட்டுள்ளார்.

ஏ-9 தரைப்பாதை வழியாக வந்த சந்திரிகா யாழ்ப்பாணத்தில் பல வழிபாட்டுத் தலங்களுக்கு செல்லவுள்ளதுடன் நாகவிகாரை, நாகதீபம் ஆகிய இடங்களுக்கு செல்லவுள்ளதாக தெரிய வருகின்றது. அத்தோடு இவர் யாழ்ப்பாணத்தில் பல சமயத் தலைவர்களை சந்திக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# மூன்று மாகாண சபைத் தேர்தல்கள்: நாளையுடன் பிரசாரங்கள் முடிவு

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் நாளை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடையவுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, கேகாலை, இரத்தினபுரி, அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய ஏழு மாவட்டங்களிலும் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சி வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதனையும் காணமுடிகிறது.

களத்திலுள்ள பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது இறுதிச் சுற்று பிரசார நடவடிக்கைகளை தமது கட்சித் தலைவர்கள் தலைமையில் இன்றும் நாளையும் வெகு விமர்சையாக முன்னெடுக்க ஏற்பாடு களை மேற்கொண்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று திருகோணமலை, கிண்ணியா பிரதேசங்களிலும் நாளை பொலன்னறுவை தெஹியத்த கண்டிய விலும் மும்முரமாக பாரிய பிரசாரக் கூட்டங்களை நடத்தவுள்ளது. ஐ.ம.சு. முயின் இறுதிப் பிரசாரக் கூட்டம் நாளை (5) அக்கரைப்பற்றில் மாலை 5 மணிக்கு ஜனாதிபதி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

முஸ்லிம் காங்கிரஸ் தமது இறுதிப் பிரசாரங் கள நடவடிக்கைகளை நாளை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கவுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் நாளை பொதுக் கூட்டங்களை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, நாளை கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் தேர்தல் இறுதிப் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபடவிருப்பதாக கூட்டமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கூறினார்.

## கபிலவஸ்து புனித சின்னங்கள்: மேலும் ஒருவாரம் இலங்கையில்

இந்திய அரசாங்கத்தினால் இங்கு அனுப்பி வைக்கப்பட்ட கபில வஸ்து புனித சின்னங்களை மேலும் ஒரு வாரத்துக்கு இலங்கையில் வைத்து பொதுமக்களின் பார்வைக்காக வைக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் விடுத்த வேண்டுகோளை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

செப்டம்பர் 04ம் திகதியன்று கபில வஸ்து புனித சின்னங்களை இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு செல்வதென்று முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இப்போது புனித சின்னங்கள் இலங்கையில் செப்டம்பர் 11ம் திகதி வரை மேலும் மூன்று இடங்களில் வைக்கப்படும் என்று இந்திய உயர் ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## விபத்தில் சிக்கி இளைஞர் மரணம்

தனியார் பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 6.30 மணியளவில் யட்டியந்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கமுனுகம 16ம் இலக்க மைல் பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்த சம்பவத்தில் ருவன் வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய சமீர ருவன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

## இன ரீதியான குறுகிய...(தொடர்)

மட்டக்களப்பு வெபர் அரங்கில் நடைபெற்றது.

நீண்டகாலமாக நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பட்ட கஷ்டங்கள் துயரங்களை நான் நன்கு அறிவேன். இனியும் நீங்கள் பயமின்றி நிம்மதியாக வாழ முடியும். அதற்கான சூழரை நாம் தற்போது ஏற்படுத்தியுள்ளோம்.

முப்பது வருடங்கள் பின்னடைவு கண்ட இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் நாம் தற்போது மிகசுந்த அக்கறையுடன் செயற்படுகின் றோம். கிழக்கின் உதயம் மூலம் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலும் நாம் இதனைத் தொடர்வோம்.

கிழக்கில் வாழும் மக்கள் அன்றும் இன்றும் எமது சகோதரர்கள் போன்று பழகுவார்கள். இந்த வகையில் இந்த நாட்டில் நாம் அனைவரும் ஒரு தாயின் மக்களே. இன, மத, குல பிரதேச பேதங்கள் எம்மத்தியில் இருக்க முடியாது. தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற இனரீதியான குறுகிய அரசியல் நோக்கங்கள் இனியும் வேண்டாம். அதற்கு இனி இடமில்லை என்றார்.

## 2014 தொடக்கம் கண்ணிவெடி அகற்றும் பணி பாதுகாப்பு அமைச்சிடம்

2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை இலங்கைப் பாதுகாப்பு அமைச்சே மேற்கொள்ளவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் வெளியேறவுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் போர் முடிந்த பின்னர் கண்ணிவெடி அகற்றும் சர்வதேச நிறுவனங்கள் வடக்கில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந் தன.

இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டன. இருப்பினும் யாழ். மாவட்டத்தில் ஒரு சில நிறுவனங்கள் தொடர்ந்தும் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. யாழ்ப்பாணத்தில் முழுமையாகக் கண்ணிவெடி அகற்றி முடிப்பதற்கு இன்னமும் 10 ஆண்டுகள் வரையில் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் உயர்மட்டக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் இலங்கையிலுள்ள தூதரகங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா. முகவர் அமைப் புக்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நிதி வழங்கும் நிறுவனங்கள் என்பன கலந்து கொண்டன.

இதில் 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இலங்கை பாதுகாப்பு அமைச்சு இலங்கையில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கை இராணுவத்தின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் ஊடாக இதனை மேற்கொள்ளவுள்ளது.

## பல்கலைக்கழகங்களுக்கு...(தொடர்)

மூன்றாவது தீர்வின் பிரகாரம் மேலதிகமாக 4,928 மாணவர்களையும் சேர்க்க முன்மொழியப்பட்டிருந்தது. 4ஆவது தீர்வின்படி 4,457 மாணவர்களை மேலதிகமாக பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்க சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

இவற்றை கவனத்திற் கொண்ட உச்ச நீதிமன்றம் 3ஆவது முன்மொழிவான 4928 மாணவர்களை மேலதிகமாக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் தீர்விற்கு அனுமதி வழங்கியது. இதன்படி வழமையாக பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கும் 21,500 மாணவர்களுடன் மேலதிக மாணவர்கள் உள்வாங்கப்படுவர்.

கடந்த ஜுலை 25ஆம் திகதி உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு அமைய இரு பாடவிதான மாணவர்களின் தரவுகள் தனித்தனியாக ஆராயப்பட்டு இந்த தீர்வுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் பாலித பெர்னாந்து நீதிமன்றத்திற்கு அறிவித்தார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மனுதாரர்களின் சட்டத்தரணிகள் ஆகியோருடன் 3 தினங்கள் தொடர்ந்து ஆராய்ந்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2011ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பழைய பாடவிதான மற்றும் புதிய பாடவிதான மாணவர்களுக்கென பொதுவான இஸட் புள்ளிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இதனால் தங்களுக்கு அநீதி ஏற்பட்டதாக மாணவர்கள் சிலர் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த நிலையில் இரு பாட விதானங்களுக்கும் தனித்தனியான புள்ளிகளை வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலையில் இரு பாடவிதானங்களுக்கும் தனித்தனியான புள்ளிகள் வெளியிடப்பட்டன. இதனாலும் மேலும் சில மாணவர்கள் பாதிக்கப்படுவதாக உச்ச நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலே மேற்படி விவகாரத்தை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கும் மாணவர் தொகையை அதிகரிக்குமாறு மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்தது. இதன்படி மானியங்கள் ஆணைக் குழு நேற்று 4 தீர்வுகள் அடங்கிய முன்மொழிவை சமர்ப்பித்தது. மேலதிக விசாரணை எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. வழக்கு விசாரணையை முன்னிட்டு பெருமளவு மாணவர்கள் நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர்.

## ஐ.நா.மனித உரிமைகள்...(தொடர்)

அதிகாரிகள் பங்கேற்பார்கள் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளுடன் ஜெனிவாவிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளதாகவும், இதன் ஒரு கட்டமாக கடந்த வாரங்களில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவளித்த மற்றும் எதிர்ப்பு வெளியிட்ட அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து விளக்கமளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் முன்னேற்ற அறிக்கை, ஐக்கிய நாடுகளின் இணையத்தளத்திலும் கடந்த வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அவுஸ்திரேலியா வரும்...(தொடர்)

அவர் குறிப்பிடுள்ளார்.

**அமைச்சர் கருத்து**

ஆனால், தஞ்சக் கோரிக்கைகளை ஐ.நா.வின் அகதிகளுக்கான சாசனத்தின் அடிப்படையில் கையாள வேண்டிய கடப்பாடு அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கு இருக்கிறது என்று அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சரான கிறிஸ் போவன் தெரிவித்துள் ளார்.

இவர்கள் கோல் கம்பத்தை நகர்த்துகிறார்கள் என்றும், எதிர்க்கட்சிகள் இப்படி கேட்பது வினோதமாக இருக்கிறது என்றும், அவர்கள் ஐ.நா.வின் அகதிகளுக்கான சாசனத்தில் இருந்து எங்களை விலகிக்கொள்ள கேட்கிறார்களா? என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் இந்தத் திட்டம் மனித உரிமைகளை மீறுவதாக உள்ளது என்று அகதிகளுக்காக செயற்படுவபவர்களும் கூறுகிறார்கள்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தைவிட தாம் கடுமையாக இருப்பதாக எதிர்க்கட்சி காண்பிக்க விளைகிறது என்று தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான வளமையத்தைச் சேர்ந்த பமீலா கர் கூறியுள்ளார்.

ஆனால், தமது திட்டம் நியாயமானது என்றுகூறுகின்ற பிசப் அவர்கள், ஆட்களை நாடு விட்டு நாடுகடத்துபவர்களைக் கையாள, இது இலங்கை அரசாங்கத்துக்கு உதவும் என்றும் குறிப்பிடுகிறார்.

நடுக்கடலில் படகில் தவித்த இலங்கையர்கள் 50 பேர் இந்தோனீசியாவால் மீட்கப்பட்டதாக வந்த செய்திகளை அடுத்து ஜுலி பிசப் அவர்களின் இந்தக் கருத்து வந்திருக்கிறது.

குழந்தைகள், பெண்கள் அடங்கலாக நடுக்கடலில் பசியுடனும், நீர்ச்சத்து குறைந்தும் அவதிப்பட்ட இந்த படகில் வந்தவர்கள் மீனவர்களால் இந்தோனீசியாவில் சேர்க்கப்பட்டனர்.

அவுஸ்திரேலியா ஆட்களை உள்வாங்குவதை அதிகரிக்கவுள்ளது என்பது குறித்து சரியாக விளம்பரப்படுத்த வேண்டும் என்றும், அதனால், உயிரைப் பணயம் வைத்து கடல் பயணம் செய்து வருபவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்றும் ஆஸ்திரேலிய பசுமைக் கட்சியின் கிறிஸ்டின் மில்னீ கூறியுள்ளார்.

அதேவேளை ஆஸ்திரேலிய திருச்சபைகளின் கூட்டமைப்பு, அவுஸ்திரேலியா அகதிகளை உள்வாங்குவதை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று கோரியுள்ளது.

இதற்கிடையே இலங்கையில் இருந்து வரும் தஞ்சக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்ப வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸும் கண்டித்துள்ளது.

## டெசோ தீர்மானங்களை...(தொடர்)

சுப.வீரபாண்டியன் ஆடுகியோர்க் நியூயோர்க் செல்லவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் 20ஆம் திகதி அமெரிக்காவுக்கு பயணமாகவுள்ள இவர்கள் இந்தியா திரும்பும் வழியில் ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைச் சபைக்கும் விஜயம் செய்து டெசோ மாநாட்டுத் தீர்மானத்தின் நகல்களை அங்கும் கையளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் அமைதியே.(தொடர்)

முக்கிய பிரச்சினைகளில் இலங்கை முன்னோக்கி செல்லும் நிலையில், அனைத்துலக சமூகத்தின் ஏனைய கூட்டாளிகளுடன் இணைந்து இலங்கைக்கு ஆதரவளிக்க அமெரிக்கா தயாராகவே உள்ளது.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், புனர்நிர்மாணத்தை ஊக்குவிககவும், அரச - தனியார் கூட்டு முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் இலங்கையர்கள் எவரும் அகதிகள் அல்லர்

## அவுஸ்ரேலிய எதிர்க்கட்சி

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் இலங்கையர்கள், அகதிகள் அல்லர் எனவும் அவர்கள் பொருளாதார குடியேற்றவாசிகள் எனவும் அந்நாட்டின் பிரதி எதிர்க்கட்சி தலைவர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. எனவே இலங்கையர்கள் அகதிகள் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவுஸ்திரேலிய எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

படகு மூலம் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவை வந்தடையும் இலங்கையர்களை மீளவும் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக நாடு கடத்தும் திட்டத்தை அமுல்படுத்த முடியாது என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவுன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் கோருவதனைப் போன்று புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக நாடு கடத்தும் திட்டமானது சர்வதேச சட்ட விதிகளுக்கு முரணானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய எதிர்க்கட்சிக்கு மனித உரிமை அமைப்புகள் கண்டனம்

இலங்கையின் அகதிகள் அனைவரையும் திருப்பியனுப்புமாறு அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சி கோரியிருப்பதை மனித உரிமைகள் அமைப்புகள் கண்டித்துள்ளன.

அகதிகளை திருப்பியனுப்பும் முன்னர் அவுஸ்திரேலியாவின் நீதியமைப்பை திருத்தி அமைக்க வேண்டும் என்றும் அந்த அமைப்புகள் கோரியுள்ளன.

இலங்கையில் போர் முடிவடைந்து விட்டது. இந்தநிலையில் அவுஸ்திரேலியாவுக்கு வரும் அகதிகள், பொருளதார அகதிகளாக உள்ளனர்.

எனவே அனைத்து அகதிகளையும் இலங்கைக்கு திருப்பியனுப்பவேண்டும் என்று அவுஸ்திரேலிய உதவி எதிர்க்கட்சி தலைவர் ஜூலி பிஷப் கோரியிருந்தார்.

எனினும் ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின்கீழ் அகதிகளின் புகலிடக்கோரிக்கையை பரிசீலிக்க வேண்டியுள்ளது என்று அவுஸ்திரேலியாவின் குடிவரவு அமைச்சர் கிரிஸ் போவன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பல்வேறு காரணங்களுக்காகவும் இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக சிறிய மற்றும் பெரிய ரக மீன்பிடிப் படகுகள், றோலர்களில் அவுஸ்திரேலியா நோக்கிச் செல்வோர் தொகை கடந்த ஒருசில மாதங்களில் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்பட்டது. இந்த அபாயமிக்க கடற்பயணங்களினால் புகலிடக் கோரிக்கையாளர்கள் பலர் உயிரிழந்தமையும், காயப்பட்டமையும் இலங்கையிலும், இந்தியாவிலுமாக கைது செய்யப்பட்டமை, குறிப்பிடத்தக்கது.

## கொக்குவிலில் வாள் வெட்டு: ஐவர் கைது

(கொக்குவில்)

யாழ்.கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவிலில் கடந்த சனிக்கிழமை இரு குழுக்களுக்கு இடையில் வாள்வெட்டு இடம்பெற்றது.

இதன்போது படுகாயமடைந்த 3 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை மேற்படி சம்பவத்துடன் தொடர்புள்ள ஐந்து பேரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## கிழக்கு மாகாணத்தில் வாக்காளர்களுக்கு சிலரால் அச்சுறுத்தல்

### தேர்தல் ஆணையாளரிடம் சம்பந்தன் முறைப்பாடு

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சிலர் தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்களை கடந்த சில தினங்களாக அச்சுறுத்தி' வருவதாக தமக்கு புகார்கள் கிடைத்துள்ளன என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை தொலைபேசி ஊடாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் இரா. சம்பந்தன் இதுகுறித்து முறையிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்களார்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாக்களிக்கும் சூழலை ஏற்படுத்தும் படியும் தேர்தல் ஆணையாளரிடம் இரா.சம்பந்தன் கோரியுள்ளார்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்று வருவதாகவும் தகவல் வந்துள்ளது.

சிலரால் தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்கள் எச்சரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தேர்தல் ஆணையாளரிடம் செய்த முறையிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்திலும் உள்ள கிராமங்களில் சிலர் வாக்காளர்களை பயமுறுத்தி வருகின்றனர் என்று தமக்கு முறைப்பாடு வந்திருப்பதாகவும் தேர்தல் ஆணையாளரிடம் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கலைக்கப்பட்ட கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் நெருங்கி வரும் நிலையில் கிழக்கிலும் வடமத்திய மாகாணத்திலும் தேர்தல் வன்முறைகள் அதிகரித்திருப்பதாக பவ்ரல் அமைப்பு ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது.

## படகு விபத்து இருவர் பலி

ஜா - எல தடுகம் ஓயா நதியில் பயணம் செய்த படகொன்று பழைய கொங்கிறீட் தூண் ஒன்றில் மோதியதால் அப்படகிலிருந்தவர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இப்படகு, ஏனைய படகுகளுடன் போட்டியிட்டுக்கொண்டு அதிக வேகத்தில சென்றதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அப்படகில் ஐவர் பயணம் செய்ததாகவும் அவர்களில் மூவர் பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஏனைய இருவரும் கரைக்கு கொண்டுவரப்பட்டபோது உயிரிழந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விரு ஆண்களும் சீதுவையிலுள்ள தேவாலயமொன்றின் திருவிழாவுக்கு வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு பலகத்துறை - கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 37 மற்றும் 48 வயதுடைய குடும்பஸ்தர்களே சம்பவத்தில் பலியானவர்களாவர்.

இருவரது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## அமரர் அமிர்தலிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்



(வலிகாமம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினர் அமரார் வி.தர்மலிங்கத்தின் 27 ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் அமரர் தர்மலிங்கம் நினைவுக் குழுத் தலைவர் எஸ் . கௌரிகாந்தன் தலைமையில் உடுவில் பிரதேச சபையின் பெது நூலக மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றது.

அமரர் தர்மலிங்கத்தின் திருவுருவப் படத்திற்க்கு திருமதி தர்மலிங்கம் மகன் சித்தார்த்தன் முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன், வலி. தெற்கு உடுவில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் உட்பட மற்றும் பலர் நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்தன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

## இன்றைய இராசி பலன் (04.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 19 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : ரேவதி காலை 10.59 வரை அதன் பின் அச்சுவினி
**திதி** : சதுர்த்தி இரவு 10.58 வரை அதன் பின் பஞ்சமி
**சுபநேரம்** : 10.35 - 12.05 **இராகுகாலம்** : 3.05 - 4.35
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தொழில் மந்த நிலை, கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, மனக்கஷ்டம்
**இடபம்** : பொருட்செலவு, அலைச்சல், போசன சுகக்குறைவு
**மிதுனம்** : தொழில் இலாபம், சுப செலவு, அந்நியர் உதவி
**கடகம்** : இடமாற்றம், தொழில் சிரமம், சஞ்சலம்
**சிங்கம்** : வீண்குறை கேட்டல், கோபமிகுதி, கஷ்ட ஜீவனம்
**கன்னி** : மனக்குழப்பம், தேக சுகக் குறைவு, துயரச் செய்தி
**துலாம்** : சுபகாரியம், நல்ல செய்தி, நண்பர் உதவி
**விருச்சிகம்** : கடன்தொல்லை, ரோகபயம், எதிரிகளால் கஷ்டம்
**தனுசு** : தனவரவு, புத்திர சுகம், தெய்வ அனுகூலம்
**மகரம்** : வயிற்று ரோகம், இல்லத்தில் குழப்பம், தாய்வழியால் சஞ்சலம்
**கும்பம்** : முயற்சியால் இலாபம், மகிழ்ச்சியான செய்தி, மூத்தோர் ஆதரவு
**மீனம்** : பொருள் இழப்பு, பிரயாணக் கஷ்டம், தூக்கமின்மை.

- **ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# ஊடகவியலாளர்கள் பலர் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதில்லை


## - கர்தினால் மல்கம் ரஞ்சித்

மனித உரிமைகள், மானுட விழுமியங்களுக்கு கொஞ்சமும் மதிப்பளிக்காது பல ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றனர். ஊடகங்கள் மோசமான எண்ணங்களுக்கு அடிபணிந்து செயற்படக் கூடாது. மானுட விழுமியங்களை பாதுகாக்க வேண்டியது ஊடகங்களின் தார்மீகப் பொறுப்பாகும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற சிக்னீஸ் விருது வழங்கல் விழாவில் கலந்து கொண்ட கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் இவவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டதுடன், சில ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர். ஊடக விதிகள் ஒழுக்க முறைமைகளுக்கு முரணான செயற்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. வர்த்தக நோக்கங்களினால் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

மனித உரிமை மற்றும் மானுட விழுமியங்களுக்கு கொஞ்சமும் மதிப்பளிக்காது சில ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றனர். ஊடகங்கள் இழிவான எண்ணங்களுக்கு அடி பணியக் கூடாது.



மேலும் அவர் தெரிவிக்கையில், ஊடகவியலாளர்களை கடத்திய மற்றும் கொலை செய்த நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# இனிமேலும் தவறுகள் நடக்கக்கூடாது என்றே அமெரிக்கா விரும்புகிறது

## - ஜெனிபர்

இலங்கையில் இனிமேல் எத்தகைய தவறுகளும் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும், அமைதியை உறுதிசெய்வதுமே அமெரிக்காவின் நோக்கம் என்று சென்னையில் உள்ள அமெரிக்காவின் துணைத்தூதுவர் ஜெனிபர் ஏ மக் இன்ரைர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்குப் பின்னர், அந்தப் பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் அமைதியை உறுதி செய்வதும், மேற்கொண்டு எத்தகைய தவறுகளும் நடக்காமல் இருக்க உத்தரவாதமளிப்பதும் அமெரிக்காவின் முக்கிய நோக்கம்.

முக்கிய பிரச்சினைகளில் இலங்கை முன்னோக்கி செல்லும் நிலையில், அனைத்துலக சமூகத்தின் ஏனைய கூட்டாளிகளுடன் இணைந்து இலங்கைக்கு ஆதரவளிக்க அமெரிக்கா தயாராகவே உள்ளது.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், புனர்நிர்மாணத்தை ஊக்குவிக்கவும், அரச - தனியார் கூட்டு முயற் சிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பெரிய நீலாவணை களப்பில் மூழ்கி இரு இளைஞர்கள் பலி

கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பெரிய நீலாவணைக் கிராமத்தில் கடற்கரையை அண்மித்த களப்பில் குளிக்க முற்பட்ட இளைஞர்கள் இருவர் அக்களப்பில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் பாண்டிருப்பு அரசடி அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த கந்தசாமி வினோத்குமார் (வயது 22), கல்முனை பற்றிமா தேசிய பாடசாலை மைதான வீதியைச் சேர்ந்த லேனோன் எட்றியன் ஹென்றிக் (வயது 22) ஆகிய இரு இளைஞர்களே உயிரிழந்தவர்களாவார்கள்.

# மாகாண சபைத் தேர்தலில் கூடுதல் முஸ்லிம் பிரதிநிதித்துவம்

நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் ஆளும் கட்சி சார்பில் அதிகளவான வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்கும் அகில இலங்கை ரீதியிலுள்ள முஸ்லிம்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை முஸ்லிம் ஒன்றியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மத்திய மாகாண சபையின் உறுப்பினரும், உடுநுவர பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், இந்த அமைப்பின் முக்கியஸ் தருமான ஏ.எல்.எம்.உவைஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை முஸ்லிம் ஒன்றியம் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பணிப்புரைக்கு அமைய, தெழில்நுட்ப மற்றும் விஞ்ஞானத் துறை பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் ஒன்றியத்தின் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியிலுள்ள முஸ்லிம்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் உதவியுடனும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் உதவியுடனும் தீர்வு பெற்றுக்கொடுக்கும் நோக்கிலான வேலைத்திட்டங்களை தாம் முன்னெடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அகிய இலங்கை முஸ்லிம் ஒன்றியத்தில் அரசாங்கத்திலுள்ள உயர்மட்ட முஸ்லிம் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், பிரதேச சபைகளின் முஸ்லிம் உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள், நகரசபை உறுப்பினர்கள், நகரபிதாக்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், பிரபல முஸ்லிம் தொழிலதிபர்கள் என 150 இற்கும் அதிகமான அங்கத் தவர்களை இந்த ஒன்றியம் கொண்டிருப்பதாக மத்திய மாகா ணசபை உறுப்பினர் ஏ.எல்.எம். உவைஸ் தெரிவித்தார்.

# கொடகே தேசிய சாகித்திய விருது விழா

கொடகே தேசிய சாகித்திய விருது விழா நாளை மறுதினம் 06ஆம் திகதி 2012ஆம் ஆண்டு வியாழக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கொழும்பு- 07, ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் குணதாஸ அமரசேகர அவர்களின் தலைமையில் விழா நடைபெறும். இதில் சிறப்பு விருந்தினர்களாகப் பேராசிரியர் வினீ விதாரன அவர்களும், தெளிவத்தை ஜோசப் அவர்களும் கலந்து கொள்கிறார்கள். இதன் நிகழ்ச்சி நிரல்களாக மங்கல விளக்கேற்றல், வரவேற்புரை, சிறப்புரை (சிங்களம்), சிறப்புரை (தமிழ்), தலைமையுரை, விருது வழங்குதல் இடம்பெறும்.

# தேசிய உதைபந்தாட்ட அணி வீரர்கள் தெரிவு

(பாமினி)

தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செய லக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்கள் 01.01.1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். ஆணகள் மட்டும் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அவர்களின் விளையாட்டுத் திறன் தகுதிகளும் ஆராயப்பட்டது. உதைபந்தாட்ட அணியில் இடம்பெறத் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்க விரும்பினால் விண்ணப் பிக்கலாம் என்பதுடன் அதற்கான படிவங்களும் இங்கு வழங்கப்பட்டன.

# இலக்கியப் பேரவையின் விருது, சான்றிதழ் பெறும் நூல்கள்

இலங்கை இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆண்டிற்கான இலக்கிய நூல்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விருது பெறும் நூல்களும், சான்றிதழ் பெறும் நூல்களும் வருமாறு:

ஆய்வு- "தென்னிலங்கையின் புராதன கோயில்கள்" என்.கே. எஸ்.திருச்செல்வம், சான்றிதழ்- "எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசைஞானம்" 'கலாஜோதி' மௌலவி காத்தான்குடி பௌஸ், காவியம்- "வாத்தியார் மாப்பிள்ளை" காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கொழும்பு.

சான்றிதழ்- "தோட்டுப்பாய் மூத்தம்மா" பாலமுனை பாறூக், கவிதை- "துயரக் கடல்" கி.பி. நிதுன், முல்லைத்தீவு, சான்றிதழ்- "கறுப்பு மழை" பெரிய ஐங்கரன், திருமலை, நாவல்- "சொடுதா" எஸ்.ஏ.உதயன் பேசாலை, மன்னார், சான்றிதழ்- "அலைக் குமிழ்" அகளங்கன், வவுனியா, சிறுகதை- "அனுசுயாவின் கரடி பொம்மை" சந்திரகாந்தா முருகானந்தன், கொழும்பு.

சான்றிதழ்- "அங்கயற்கன்னியும் அவள் அழகிய உலகமும்" தாட்சாயணி, சாவகச்சேரி, சிறுவர் இலக்கியம்- "சந்திரன் கதை" கலாபூஷணம் கேணிப்பித்தன், திருமலை, சான்றிதழ்- "படைப்புகள் மூலம் அல்லாஹ்வை அறிவோம்" எம்.எஸ்.எம்.நுஸைர், காததான் குடி, சமயம்- "முன்னோர் சொன்ன கதைகள்" யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய்.

சான்றிதழ்- "ஸ்ரீ மத் பகவத் கீதை சுலோகம், உரை, விளக்கம், கதைகள்" தமிழறிஞர் கே.வி. குணசேகரன், கோப்பாய், மொழிபெயர்ப்பு- "முல்லைத்தீவு தாத்தா" திக்குவல்லை கமால், சான்றிதழ்- "இந்த நிலம் எனது" கெகிறாவ ஸீலைஹா, அறிவியல்- "எண்ணங்களும் வண்ணங்களும்" கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு, நல்லூர்.

பல்துறை - "நேற்றுப்போல இருக்கிறது" தெகிவளை கே.எஸ். பாலச்சந்திரன், நாடகம்- "குறுங் கூத்துக்கள் (ஐந்து தென்மோடிக் கூத்துக்கள்)" கலையார்வான் (கு.இராயப்பு), யாழ்ப்பாணம்.

"விருதுகள், சான்றிதழ்கள் வழங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்" என்று இலக்கியப் பேரளவையின் சி.சிவதாசன் அறிவித்துள்ளார்.

# திஸ்ஸமகாரமையில் கபிலவஸ்து புனிததாது

புத்த பகவானின் கபில வஸ்து புனித தாது நாளை 05ஆம் திகதி தொடக்கம் 07ஆம் திகதி வரை திஸ்ஸமகாராமை ரஜமகா விகாரையில் பொதுமக்கள் தரிசனத்துக்காக வைக்கப்படவுள்ளதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் ஆர்.சீ.த.சொய்ஸா தெரிவித்தார்.

காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை பொது மக்கள் தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்படவுள்ளதோடு வருகை தரும் பக்தர்களுக்காக போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கை அகதிகளை நாடுகடத்த வேண்டும்

## - எதிர்க்கட்சித் தலைவர் ஜூலி பிஷப்

அகதி அந்தஸ்துக் கோரி அவுஸ்திரேலியா வந்துள்ள இலங்கையர்களை நாடு கடத்து மாறு அவுஸ்திரேலிய பிரதி எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரதி எதிர்க் கட்சித் தலைவர் ஜூலி பிஷப் என்பவரே சமஷ்டி அரசாங்கத்தைக் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இலங்கையில் சிவில் யுத்தம் முடிந்து விட்டது. எனவே, இலங்கையர்களுக்கு இனிமேலும் அகதி அந்தஸ்தை சமஷ்டி அரசு வழங்கக் கூடாது. அநேக இலங்கையர்கள் புகலிடம் கோருபவர்கள் அல்லர். பதிலாக பொருளாதார நோக்கிலேயே அவர்கள் நாடு கடந்து வருவதாக பிரதி எதிர்க் கட்சித் தலைவர் ஜூலி பிஷப் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய சட்ட முறைமைகளுக்குள் அவர்கள் பிரவேசிக்க முயலும் முன்னர் அவர்கள் நாடு கடத்தப்பட வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார். இலங்கைக் கரைகளில் இருந்து அநேகமான படகுகள் புறப்படுவதை தடுப்பதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டு வருகிறது. ஆனாலும் எப்படியோ இங்கு வருவோரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப உடனடி ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஜூலி பிஷப் தெரிவித்தார்.



# முன்னாள் அமைச்சர் விஜயபாலா மெண்டிஸ் காலமானார்

புடவைத் தொழிற்துறை, போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சராக ஐ.தே.க.அரசாங்கத்தில் பணியாற்றிய விஜயபால மெண்டிஸ் காலமானார்.

இறக்கும் போது இவருக்கு வயது 84 ஆகும். 1971ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை அமைச்சராக இவர் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடலில் மிதந்துவந்த இரசாயன திரவத்தை மது என நினைத்து பருகியவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார், வங்காலைக் கடலில் மிதந்துவந்த போத்தல் ஒன்றில் மதுபானம் இருப்பதாக எண்ணி அதனை எடுத்து அருந்திய 4 இளைஞர்களில் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணியளவில் உயிரிழந்துள்ளார்.

மன்னார், வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர் மன்னார் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ள தாக தெரியவருகிறது.

வங்காலைக் கடற்கரைக்கு கடந்த புதன்கிழமை சென்றிருந்த இந்த 4 இளைஞர்களும் கடலில் இருந்து மிதந்துவந்து கரையொதுங்கிய வெளிநாட்டில் தயாரிகப்பட்ட இந்த மதுபான போத்தல் ஒன்றைக் கண்டெடுத்துள்ளதாகவும் இதில் வெளிநாட்டு மதுபானம் காணப்படுவதாக எண்ணி அந்தப் போத்தலில் காணப்பட்ட திரவத்தை எடுத்து இவர்கள் அருந்தியதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்த திரவத்தை அருந்திய பின்னர் இந்த 4 இளைஞர்களில் சிலர் வாந்தி எடுத்தபோதிலும், அவர்கள் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை எனவும் இருப்பினும் இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிட மான நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் உறவினர்கள் கூறியுள்ளனர்.

இவர்கள் அருந்தியதாகக் கூறப்படும் திரவத்தின் வெற்றுப்போத்தல் வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டபோது, அது மதுபானம் அல்ல எனவும் அவர்கள் அருந்திய திரவம் சடலங்களுக்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் போது பயன்படுத்தும் ஒருவகை மருந்து எனவும் தெரிய வந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வலையில் சிக்கிய மர்மப் பொருளை எடுத்த இளைஞர் கையை இழந்தார்

## முல்லைத்தீவில் பரிதாபம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மணிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மர்மப்பொருள் ஒன்று வெடித்ததில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவரின் இடது கையின் மணிகட்டு சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு, செம்மணிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆரோக்கியநாதன் செந்தூரன் (வயது 21) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தார்.

கடற்கரையில் மீன்பிடித்துகொண்டிருந்த வேளையில் வலையில் மர்மப்பொருள் ஒன்று அகப்பட்டதாகவும் இதனை கையில் எடுத்தபோது அது வெடித்ததாகவும் படுகாயமடைந்த இளைஞர் கூறினார்.

இந்த இளைஞர் உடனடியாக முல்லைத்தீவு, மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிசிச்சை பெற்றுவருகின்றார்.

இது தொடர்பான விசாரணையை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மல்லாகம் பழம்பதி ஆலய வருடாந்த மகோற்சவம்

(வலிகாமம்)

மல்லாகம் பழம்பதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் 05ஆம் திகதி புதன் கிழமை பகல் 11.00 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தொரு நாட்கள் நடை பெறவுள்ளது.

இவ் உற்சவ காலத்தில் தினமும் பகல் 9.00 மணிக்கு விநாயக வழிபாடும் 10. 00 மணிக்கு பூசையும் 10.30 மணிக்கு ஸ்தம்ப பூசையும் நடைபெற்று 12.00 மணிக்கு பகல் பூசை நிறைவு பெறும்.மாலையிலும் விசேட பூஜைக ளும் சுவாமி வீதிஉலா வருதலும் இடம்பெறும்.

# கிழக்கு தமிழ் மக்களின் தீர்ப்பு சர்வதேசத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக அமைய வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன்

(மட்டக்களப்பு)

கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்களிப்பு நம் இலக்கை அடையக்கூடிய வகையில் அமைய வேண்டும். இந்த ஜனநாயகத் தீர்ப்பு தற்பொழுது சர்வதேச சமூகத்தால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக அமைவது முக்கியமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் கூறினார்.

காரைதீவில் நடைபெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,



தமிழ் மக்களின் பிரச்சினை இன்று சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நமது அரசியல் வரலாற்றில் முதல முறையாக சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையின் கீழ் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழர் பிரச்சினை தொடர்பில், இழைக்கப்பட்ட அநீதிகள், குற்றங்கள் தொடர்பில் இரு ஆணைக்குழுக்கள் இரு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழு அறிக்கை மற்றும் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை என்பனவே அவையாகும்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசுக்கெதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இந்த ஆணைக் குழுக்களின் அறிக்கைகளிலுள்ள சகல கருமங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மிக முக்கியம் பெற்ற தேர்தலாகக் கருதப்படுகின்றது என்றார்.

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி

ஹங்கல்ல, கட்டுவில பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 24 வயதான இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளையிலேயே இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அண்மையில் இவர் சிறைச்சாலையிலிருந்து விடுதலையானவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒருங்கிணைபுக்குழுக் கூட்டம்

(வலிகாமம்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைபுக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை 04 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கினைப்புக்குழுத் தலைவரு மான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது

# பொறுப்பை சரிவர நிறைவேற்ற முடியாவிட்டால் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்யுங்கள்

## வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கங்கத்தினர் கடிதம்

நகரசபைத் தலைவர் பொறுப்பை சரிவரச் செய்ய முடியாது போனால், பதவியை இராஜினாமாச் செய்து தகுதியான சக உறுப்பினருக்கு அந்தப் பதவியை வழங்குங்கள்.

இவ்வாறு, வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தினர் நகரசபை தலைவரை கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"நகரசபையானது தொடர்ந்து பல கேளிக்கை நிகழ்வுகளுக்கு முன்னுரிமை கொடுத்து நகரசபை மைதானம், நகரசபை மண்டபம், கலாசார மண்டபம் போன்றவற்றை வாடகைக்கு விடுவதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை மிகவும் வேதனையுடன் அறியத்தருகின்றோம்.

நகரசபை நிர்வாகமானது தமிழ் மக்களின் கலை, கலாசார நிகழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்து கல்வி, விளையாட்டுத்துறைகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

இந்தமுறை விளையாட்டுத்துறையில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 45 இளைஞர், யுவதிகள் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தும் அவர்கள் தங்கள் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதவாறு தாங்கள் காணிவேல் போன்ற கேளிக்கை நிகழ்வுகளுக்கு நகரசபை மைதானத்தை வாடகைக்கு கொடுத்துள்ளீர்கள்.

சபையில் இந்த நடவடிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியும் தாங்கள் சர்வாதிகார முறையில் தன்னிச்சையாக முடிவெடுத்திருப்பது வேதனையளிக்கும் செயற்பாடாகும்.

இனிவரும் காலங்களில் தாங்கள் நகரமக்களின் நன்மை கருதி செயற்படுவீர்கள் என எதிர்பார்ப்பதுடன், சரிவர இந்தப் பதவியை செய்ய முடியாது போனால் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்து தகுதியான சக உறுப்பினருக்கு பதவியை வழங்குமாறு கோருகின்றோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜே.வி.பியின் அலுவலகங்கள் மூன்று தீக்கிரை

அம்பாறை, பதியத்தாளை பிரதேசத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் அலுவலகங்கள் மூன்று தீக்கிரையாகியுள்ளன.

இனந்தெரியாத ஆயுதங்கள் தாங்கிய குழு ஒன்று நேற்று முன்தினம் இரவு இவ் அலுவலகங்களுக்கு தீ வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக பதியத்தாளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகமும் உறுதி செய்தது.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## கண்ணீருடனேயே வாழும் காணாமல் போனோர்களின் உறவுகள்

கடந்த முப்பதாம் திகதி உலகளாவிய ரீதியில் காணாமல் போனோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. வவுனியா பேரூந்து நிலையத்திற்கு முன்பாக நிகழ்ந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்திலும், ஆர்ப்பாட்டப் பேரணியிலும் கலந்து கொண்டவர்கள் அனைவருமே தமிழர்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கூட்டாக இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன. யுத்தத்தில் ஈடுபடும் அனைத்துத் தரப்புகளுமே ஜெனீவா சமவாயத்தை கையில் வைத்துக்கொண்டு சட்டதிட்டங்களுக்கு அமைவாகப் போர் புரிவதில்லை.

இலங்கையில் முப்பது வருட கால யுத்தத்துக்கு முன்னர் இரண்டு தடவைகள் ஜே.வி.பி. கிளர்ச்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. அப்போதும் கூட அத்துமீறிய சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆட்களும் காணாமல் போயிருக்கின்றனர். யுத்தத்தில் ஈடுபடும் எந்தத் தரப்பையும் பொறுத்தவரை ஆயுதங்களே அதிகமாகப் பேசும். மனிதாபிமானம் மௌனித்துவிடும்.

வவுனியா ஆர்ப்பாட்டத்திலும், பேரணியிலும் கலந்து கொண்ட ஒரு தாய்க்கு வயது 75. சுமார் 22 வருடத்திற்கு முன்னர் காணாமல் போன தனது மகனின் புகைப்படத்தை தாங்கியபடி அந்தத் தாய் கண்ணீர் விட்டபடியே நின்று கொண்டிருந்தார். 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் முப்பதாம் திகதி ஆயுதக் குழுவொன்றினால் தனது மகன் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாக அந்தத் தாய் கண்ணீர் மல்கக் கூறினார். தமது மகன் கடத்தப்பட்டபோது, அவருக்கு வயது 17 என்றும், அவரைத் தேடித் தான் அலையாத இயக்க முகாம்கள் எதுவுமே இல்லையென்றும் அந்த மூதாட்டி கண்ணீர் மல்கக் கூறினார்.

இந்தியப்படை 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி இலங்கையை விட்டு வெளியேறி ஒரு கிழமை செல்வதற்கு முன்பாகத் தனது மகன் கடத்தப்பட்டார் என்று அந்தத் தாய் கூறினார். தனது இரத்த உறவை கடந்த இருபதுக்கும் மேற்பட்ட வருடங்களாக தேடி அலையும் அந்தத் தாயின் சோகம் சொல்லிமாளாது.

1987ஆம் ஆண்டு ஜூலை மாத பிற்பகுதியில் இந்தியப் படை இலங்கைக்கு வந்தது. அந்த வருடம் ஒக்டோபர் மாதமே வடக்கிலும் கிழக்கிலும் இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் வெடித்தது. சுமார் இரண்டரை வருடங்கள் மோதல் நீடித்தது. அப்போது இலங்கை ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாசவின் அழுத்தத்தின் பேரில் இந்தியப்படை இங்கிருந்து வெளியேறியது. அப்போது இலங்கையின் முப்படையினரும் முகாம்களுக்குள் முடக்கப்பட்ட காரணத்தால் தமிழ் ஆயுதக்குழு ஒன்றின் கட்டுப்பாட்டில் வடக்கும் கிழக்கும் வந்தது. அப்போது ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டார்கள்., காணாமல் போனார்கள். மேலே குறிப்பிட்ட இந்த மூதாட்டியைப் போன்று காணாமல் போன தமது பிள்ளைகளை தேடியலையும் தாய்மார்களும் நூற்றுக் கணக்கிலுள்ளனர்.

1995ஆம் ஆண்டு மூன்றாவது ஈழ யுத்தத்தின்போது யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் மூன்று இலட்சம் மக்கள் வன்னிக்கு விரட்டப்பட்டனர். அப்போது காணாமல் போனவர்களும் இருக்கிறார்கள். எறிகணை வீச்சுகள், விமானத் தாக்குதல்கள், குண்டு வீச்சுகள், கெரில்லாப்பாணி அதிரடித் தாக்குதல்கள் போன்றவை நடைபெறும்போது கொல்லப்பட்டவர்களின் பெயர், விபரங்கள் அச்சொட்டாக இனங் காணப்படுவதில்லை. இவர்களும் காணாமல் போனோரின் பட்டியலுக்குள்ளேயே உள்வாங்கப்படுகின்றனர். முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதி யுத்தம் கூட மக்கள் செறிந்தும், பரந்தும் வாழ்ந்த பகுதிகளுக்குள்ளேயே இடம்பெற்றிருக்கின்றது.

மக்கள் வாழும் பகுதிகளுக்குள் ஆயுத மோதல்கள் இடம்பெறும் போது அப்பாவி மக்களே அதிகம் பலியெடுக்கப்படுகிறார்கள். சிறுவர் போராளிகளாகக் கொண்டு செல்லப்பட்டவர்களில் எத்தனையோ பேர் காணாமல் போயிருக்கிறார்கள். மாற்றுக் கருத்துக் கொண்ட எத்தனையோ பேருக்கு மண்டையில் போடப்பட்டிருக்கிறது.

இந்த யுத்தம் நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழ் இளைஞர், யுவதிகளைக் கொண்ட ஓர் ஆயுத இயக்கத்திற்கும், நூற்றுக்கு தொண்ணூறு சதவீதத்திற்கும் அதிகமான சிங்களவர்களைக் கொண்ட இலங்கையின் முப்படையினருக்கும் இடையேதான் நடைபெற்றது. எனவே தவிர்க்க முடியாமல் இனம் சார்ந்த குறியீடு இதற்கு இருக்கிறது. ஆகவேதான் பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் சிங்களப் படையினர் தமிழர்களைக் கொன்றுவிட்டார்கள் என்ற பாணியில் கதையளக்கத் பார்க்கின்றன. இந்த மூன்று தசாப்த கால யுத்தத்தில் இலங்கைப் படையினரால் கொல்லப்பட்ட தமிழர்களை விட தமிழ் ஆயுதக் குழுக்களால் கொல்லப்பட்ட தமிழர்களின் தொகையே அதிகம். யுத்தம் முடிந்துவிட்டது. ஆனாலும் கோயபல்ஸ்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# யுத்தம் முடிந்தாலும் சோகங்களுக்கு முடிவில்லை

- ஜெயம் ஜெகன்

போரின் பிசகாத பயணத்தில் பிந்தாமல் சிதறிய ஊர்களில் புதுக்குடியிருப்பும் ஒன்று. முல்லைத்தீவிலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்த புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திலுள்ள 19 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டன. புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 589 உறுப்பினர்களைக் கொண்ட 207 குடும்பங்கள் கடந்த மாதம் 13ஆம் திகதி தமது சொந்த இடத்திற்கு மீள்குடியேற்றப்பட்டார்கள். யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் கடந்த நிலையில் தற்போதே இம்மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இத்தனை வருடங்களாக இவர்களை மீள்குடியேற்றம் செய்யாமைக்குக் காரணம் "கண்ணி வெடிகள் முற்று முழுதாக அகற்றப்படவில்லை" என்பதுதான்.



தற்போது கண்ணி வெடிகள் அகற்றப்பட்டதிற்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்தே மீள்குடியேற்றம் செய்யப்படுகின்றது. ஆனால் நேரடியாகச் சென்று அந்த நிலங்களைப் பார்த்தால் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு இருக்கிறதா? அல்லது மக்களின் மிஞ்சிய உடைமைகள் களவாடப்பட்டு களையப்பட்டிருக்கின்றனவா? என்பது புலனாகும்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தத்தமது காணிகளைத் துப்பரவு செய்து வருகின்றார்கள். இதன்போது வெடிக்காத பல வெடிபொருட்கள் புதைத்தும், மரப் பொந்துகளுக்குள்ளும் இருக்கின்றன. வெடிபொருட்களைக் காண்கின்ற மக்கள் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கும் மற்றும் இராணுவத்தினருக்கும் அறிவித்தலைக் கொடுக்கின்றனர். இதனை அறிந்த இரு பிரிவினரும் வெடிக்காத வெடிபொருட்களை பாதுகாப்பாக மீட்டுச் செல்கின்றார்கள். மக்களினால் கொடுக்கப்பட்ட அறிவித்தலை ஏற்று நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மக்கள் இரவு வேளைகளில் குப்பைகளையும், தடிகளையும் சேர்த்துக் கொளுத்தி அவற்றோடு வெடிபொருட்களை வெடிக்க வைக்கின்றனர். இதனால் அயலில் உள்ள மக்கள் பாரிய சத்தத்தைக் கேட்டு அச்சம் கொள்கின்றனர். கடந்த 28ஆம் திகதி புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெ. ஜெயக்குமாரின் வீட்டில் நின்ற பனையில் ஒரு ஆர்.பி.ஜி பனையைத் துளைத்தபடி வெடிக்காத நிலையில் இருந்ததைக் கண்ட உரியவர்கள், கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவித்தனர். அறிவித்த மறுகணமே கண்ணி வெடிப் பிரிவினர் வந்து பனையில் ஏறி கயிற்றை ஆர்.பி.ஜியின் விசிறியில் கட்டி, விசிறியை விழுத்திவிட்டார்கள். ஆனால் இதன் முன்பக்கம் பனையுடனேயே துளைத்தபடியுள்ளது.




இது எப்போது வெடிக்கும் என்பது யாருக்குத்தான் தெரியும். புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தைப் பொறுத்தமட்டில் குறைந்தது மக்கள் குப்பைகள் கொளுத்துகின்ற போது ஒரு நாளைக்கு பல வெடிபொருட்களாவது வெடிக்கின்றன.

குறிப்பாக இந்த வட்டாரத்தில் அன்ரன் என்பவரின் வீட்டில் தமிழன் குண்டு - 1, கைக்கு ண்டு-2, அருமை என்பவரின் வீட்டில் கிபிர்க்குண்டு-1, பாக்கியராசா என்பவரின் வீட்டில் ஆர்.பி.ஜி-2, கைக்குண்டு-1, அருளானந்தம் என்பவரின் வீட்டில் ஆர்.பி.ஜி-1, லூயிஸ் என்பவரின் வீட்டில் ஆர்.பி.ஜி-1, கைக்குண்டு-2, யோசேப்பு என்பவரின் வீட்டில் கைக்குண்டு -2, ஆர்.பி.ஜி-1, சிறிய தோட்டாக் குண்டு - 250, ஜெயம் என்பவரின் வீட்டில் ஆர்.பி.ஜி-2, சிறிய தோட்டாக்கள் - 100, றங்கன் என்பவரின் வீட்டில் ஆர்.பி.ஜி-1, சுஜீவன் என்பவரின் வீட்டில் ஆர்.பி.ஜி-2, நிக்ஷ்சன் என்பவரின் வீட்டில் ஆர்.வி.ஜி-3, கைக்குண்டு-1 இப்படியாக இன்னும் பலரின் பெயரை பட்டியலிட்டு நீட்டிக்கொண்டு போகலாம். இன்றுள்ள நிலைமைகளில் இவர்களின் வீட்டில் இவ் வெடிபொருட்கள் உரியவர்களினால் அப்புறப்படுத் தப்பட்டாலும் மக்கள் மீள்குடி யேறி தமது வீடு, காணிகளை துப்புரவு செய்த போதே மேலே குறிப்பிடப்பட்ட வெடிபொருட்களை மக்கள் கண்டுகொண்டனர்.

வவுனியா-செட்டிகுளம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் கடந்த 13ஆம் திகதி அங்கிருந்து அழைத்துவரப்பட்டு, புதுக்குடியிருப்பு - கைவேலி கணேசா வித்தியாசாலையில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் இருபது ஆயிரம் ரூபாய் பணமும் வழங்கப்பட்டு, மூன்று நாட்களுக்குப் போதுமான சமைத்த உணவு வழங்கப்பட்டது. இதையடுத்து தமது சொந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டு மீள்குடியேற்றப்பட்டனர். முள்ளிவாய்க் கால் வழியாகச் சென்ற மக்கள் அன்று தாம் சென்ற நிலைமையைச் சொல்லிச் சொல்லி அழுதனர் மூன்று வருடங்களுக்குப் பின்னர் முதல் முறையாக இறப்புக்க ளையும், இழப்புக்களையும் கண்ணீரினால் தமது மண்ணுக்கு அபிசேகம் செய்த அந்தக் காட்சி எழுத்து வடிவில் எழுத முடியாதவை. சிறுவர்கள் வெடிபொருட்களைக் கூட விளையாட்டுப் பொருட்களாய் எடுத்து விளையாடுபவர்கள். புதுக்குடியிருப்பில் சிறுவர்கள் வெடித்துச் சிதறிய குண்டுகளின் துண்டுகளையம், சிறிய தோட்டாவின் மூடிகளையும், சிறிய தோட்டாக் குண்டுகளையும் எடுத்து"குட்டான் சோறு" விளையாட்டு விளையாடுகின்றார்கள்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா வெற்றி பெறுவாரா?


உலக மக்களின் பார்வை தற்போது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை நோக்கியே திரும்பியுள்ளது. குடியரசு கட்சி வேட்பாளரான மிற் ரொம்னி தன்னையொரு கடும் கோட்பாட்டாளராகவே காட்டிக் கொள்கிறார். 65 வயதான இவர் மசாசூசெற்ஸ் மாநிலத்தின் முன்னாள் கவர்னராவார். இவர் மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடுகளைப் பொறுத்தவரை மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியுள்ளார். இவர் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியுமாவார். ஜனாதிபதித் தேர்தலுக்கு பத்து வாரங்களே உள்ள நிலையில் அவரது உதவி ஜனாதிபதி வேட்பாளரான போல் றயன் அவரது இளம் மனைவியுடன் ஒரு கவர்ச்சி வேட்பாளராகவே வலம் வருகிறார். அமெரிக்காவின் பெரிய பத்து மாநிலங்களில் வெற்றி பெறுபவரே ஜனாதிபதியாக வரமுடியும். அமெரிக்க கூட்டாட்சி உருவானபொழுது இருந்த 13 மாநிலங்களில் இந்தப் 10 மாநிலங்களும் வலுவான பொருளாதார வளங்களைக் கொண்டவை. எல்லாமாக 50 மாநிலங்க ளைக் கொண்ட அமெரிக்க தேசத்தில் இந்தப் 10 மாநிலங்களே நிர்ணயிக் கின்றன. இதுவும் ஒரு வகை ஜன நாயகம்தான்.



மிற் ரொம்னி

பராக் ஒபாமா ஜனநாயகக் கட்சி வேட்பாளராக இரண்டாவது தடவையும் தேர்தலுக்கு முகம் கொடுக்கிறார். இவரது போட்டியாளர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர். இந்த இரு வேட்பாளர்களில் யார் வெற்றி பெற்றாலும் வெளிநாட்டுக் கொள்கை ஒரேய மாதிரியாகவே இருக்கும். இதனை யாழ்ப்பாணத்திலே கொழுக்கட்டையும் மோதகமும் போல இந்த இரண்டு கட்சிகளின் கொள்கைகளும் ஒரே மாதிரியானவையே என்று கூறுவார்கள். அமெரிக்காவில் யாரும் ஒரு துப்பாக்கி வைத்திருக்கலாம். இதுவும் ஒருவகை ஜனநாயகம்தான்.

பிற நாடுகளுடன் அமெரிக்கா போர் புரியும்போது ஒரு கட்டுப்பாடில்லாத அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதிக்கு உண்டு. அமெரிக்க ஜனாதிபதியின் அலுவலகம் "வெள்ளை மாளிகை" என்று அழைக்கப்படுகிறது. இது வெளித் தோற்றத்திலே கொழும்பு மாநகரசபை கட்டடத்தைப் போன்றது. அமெரிக்காவில் 1920ஆம் ஆண்டுதான் பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டது. 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்ட பின்னர் உலகில் அங்குதான் பெண்களுக்கு சம சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் உரிமை பின்னர் மற்ற நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது.



ஒபாமா

உலகத்திலேயே முதன் முதலாக ஒரு நாட்டுக்கு அரசியல் யாப்பு எழுதப்பட்டது என்றால் அது அமெரிக்காவில்தான். உலகத்திலேயே மிகவும் சிறிய அரசியல் யாப்பு என்றால் அதுவும் அமெரிக்க அரசியல் யாப்புதான். உலகத்திலேயே ஜனாதிபதி ஆட்சி முறை முதலில் அமுலுக்கு வந்த நாடும் அமெரிக்காதான்.

அமெரிக்கா ஒரு குடியேற்ற நாடாகும். ஆதிகாலத்தில் பிரித்தானிய பாராளுமன்றத்தால் இந்த நாட்டு மாநிலங்கள் நிர்வகிக்கப்பட்டன. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பல அமுக்கக் குழுக்கள் செயற்படுகின்றன. வர்த்தகர்கள் ஒரு பக்கம் புத்திஜீவிகள், தொழிலாளர் அமைப்புகள் என பல அமுக்கக் குழுக்கள் இருக்கின்றன. உலகத்திலேயே உள்ள மிகப் பெரிய 500 கோடீஸ்வரர்களில் முக்கால்வாசிப் பேர் அமெரிக்காவிலேயே உள்ளனர்.

**சி.குமாரலிங்கம்**

# வடக்கு, கிழக்கில் கல்வி வளர்ச்சி மழுங்கடிக்கப்படுகிறது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வியின் வளர்ச்சி மழுங்கடிக்கப்படுகிறது. இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேசியும் பயனளிக்கவில்லை. இந்த நிலை தொடருமானால் குறித்த அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக்குழு வவுனியாவில் கூடியபோதே இம் முடிவு எடுக்கப்பட்டது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கூட்டம் நடை-பெற்றது. இலங்கையின் இன்றைய கல்விநிலை பற்றியும், ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பல்கலைக்கழக போதனாசிரியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு அளிப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்விநிலையில் பாரிய பின்னடைவு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருப்பதாக கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் எச்சரிக்கை செய்தனர். ஜனாதிபதி தலையிட்டு இந்த சீரழிவுப் போக்கை முடிவுக்கு கொண்டுவரத் தவறினால் நிலைமை இன்னும் மோசமாகும் என்று மேற்படி ஆசிரியர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சபுகஸ்கந்த சுத்திகரிப்பு பணிகள் நிறுத்தம்

சவூதி அரேபிய லைட் மசகு எண்ணெய்யை பயன்படுத்தியதாலேயே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு சுத்திகரிப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை பெற்றோலியத்துறை அமைச்சு நிராகரித்துள்ளது.

கப்பலில் இருந்து கொழும்பு துறைமுகத்தினூடாக எரிபொருளை விநியோகிக்க பயன்படுத்தும் குழாயில் ஏற்பட்ட திடீர் திருத்தம் காரணமாகவே சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் 3 தினங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியது.

திருத்தப் பணிகள் நிறைவடையும் வரை சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இருந்த போதும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு எதுவும் கிடையாது எனவும் அமைச்சு கூறியது.

# கத்திக் குத்து

அக்கரைப்பற்றிலுள்ள, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாவட்டக் காரியாலயம் பொறுப்பாளர் ஏ.எல். மர்ஜூன் மாற்றுக் கட்சியினாரால் தாக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

அக்கரைப்பற்று மத்திய குழுவின் உபதலைவருமான இவர் கத்தி குத்துக்கு இலக்காகி, காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# நீரேந்துப் பகுதிகளில் மழை

நீரேந்து பகுதிகளில் இடைக்கிடை மழை பெய்து வரும் நிலையில் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதோடு நீர் மின் உற்பத்தியும் 21 வீதமாக அதிகரித்துள்ளதாக மின்சார சபை கூறியது.

கடந்த சில மாதங்களாக நீரேந்துப் பகுதிகளில் மழை வீழ்ச்சி வெகுவாக குறைவடைந்த நிலையில் நீர்த்தேக்கங்கள் வரண்டதோடு நீர் மின் உற்பத்தியும் 15 வீதம்வரை குறைவடைந்தது. இதனால் எரிபொருள் மூலமே கூடுதலான மின் உற்பத்தி செய்யப்பட்டது. இதற்குக் கூடுதலான நிதி செலவிடப்பட்டது.

இதேவேளை, எதிர்வரும் தினங்களிலும் இப்பிரதேசங்களில் இடைக்கிடை ஓரளவு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இன்றைய சிந்தனை

## விவேகம் - முன் யோசனை - வாழ்வியல்

எவன் உண்மையில் எது தகுதியானது என்பதை இனங்கண்டு செயற்படுத்துகிறானோ, எவன் இழிவில் இருந்து தன்னைக் காத்துக் கொள்கிறானோ அவனே விவேகம் உள்ளவன். அவனே முன்யோசனையுள்ளவனும் ஆவான். விவேகமும் முன்யோசனையும் வெவ்வேறல்ல.

எதைச் செய்ய வேண்டும் என்பது நன்றாகவே தெரிந்திருந்தும் அதற்கு நேர் எதிரிடையாகச் செயல்படுகிறவர் கூரிய அறிவுடையவர் என்றாலும் பலமற்றவரே.

ஒழுக்க உணர்வுடைய ஒருவர் எதைச் செய்தாலும் அது தகுதியானதாகவே இருக்கும். அறிவில் சிறந்தவர்கள் உண்மையிலேயே தற்செயல்களைத்தாம் செய்வார்கள். அறிவற்றவாகளால் அது முயன்றாலும் முடிவதில்லை.

நீதி நேர்மையுடன் நடப்பதும், ஒழுக்கமுறைகளைக் கடைப்பிடிப்பதும் விவேகம்.

உள்ளத் தூய்மை, கட்டுப்பாடு, கடமையுணர்வு கொண்டவராய் வாழுங்கள். தன்னடக்கத்தோடு, தன்னலமற்றவராய் நடந்து கொள்ளுங்கள்.

காலத்தை வென்று நிற்கும் கருத்துக்களை ஏற்பது மடமையாகாது. நம்பிக்கையோடு அவற்றைப் பின்பற்றுவதும் குறையாகாது. சிறந்த மனிதர்கள் தங்களுடைய சொந்த அறிவையே நம்பி நிற்கிறார்கள். ஒருபோதும் அடுத்தவருடைய அறிவை அவர்கள் சார்ந்து நிற்பதில்லை.

- சோக்கிரட்டீஸ்

# காதல் விவகாரம்: சிறுமி வெட்டிக் கொலை

கெக்கிராவ திப்படுவே என்ற இடத்தில் காதல் பிரச்சினை காரணமாக 17 வயது சிறுமி ஒருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளதுடன் சிறுமியின் தாயார் மற்றும் சந்தேக நபரின் தாயார் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் விசமருந்திய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கெக்கிராவப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது-

குறிப்பிட்ட யுவதியும் அவளது தாயாரும் தனது காதலன் வீட்டுக்குச் சென்ற சமயம் அங்கு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பூதாகரமாகி யுவதி வெட்டுக் காயங்களுடன் மரணமடைந்துள்ளதுடன் கடுங்காயங்களுக்குள்ளான யுவதியின் தாயாரும் காதலன் என சந்தேகிக்கும் இளைஞனின் தாயாரும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இளைஞன் விசம் அருந்திய நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புனர்வாழ்வு மற்றும் மீள்இணைப்பால் சமூகத் நற்பிரஜைகளாகத் திகழும் முன்னாள் போராளிகள்

தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் என்ற பிரிவினையின்றி வாழ்ந்து வந்த இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக நிலவியிருந்த பயங்கரவாதம் ஒருவிரிசலை ஏற்படுத்தியது.

2009இல் இப்பயங்கரவாதம் வெற்றிகொள்ளப்பட்டது முதல் மீண்டும் மக்களுக்கிடையெ ஐக்கியம் ஏற்பட்டு மக்கள் அமைதியான சூழலில் வாழ்ந்து வருகின்றார்கள்.தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தி, தனிநாடு, தனியாட்சி கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை அரசாங்கத்துக்கெதிராக பல சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட வந்தவர்கள் இன்னும் பல நாடுகளில் தடை செய்யப்பட்ட அமைப்பாகவே உள்ளது. இவர்களது செயற்பாடுகளால் பல்லாயிரக்கணக்கானோரின் உயிர் காவுகொள்ளப்பட்டதுடன், பல கோடி சொத்துக்களுக்கும் அழிவு ஏற்பட்டது.

## புனர்வாழ்வு மையம் மற்றும் பாதுகாப்பான தங்குமிடம்

இப் பயங்கரவாத அமைப்பில் விருப்பத்தின் பெயரிலும் வலுக்கட்டாயமாகவும் இணைக்கப்பட்டோர் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தினரிடம் சரனடைந்தனர். இவர்களுக்கு மிகுந்த பயனை அளிக்கக்கூடிய வகையில் வினைத்திறன் மிக்கதாக புனர்வாழ்வுத்திட்டமானது இலங்கை அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

இவ் விசேடமாக திட்டதின் வெற்றியின் காரணமாக, தற்போது ஏறத்தாள 11000க்கு மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் அவர்களது குடும்பங்களுடன் இணைக்கப்பட்டவுள்ளனர்.

விடுதலைப்புலிகளினால் உளவியல் மாற்றத்திற்கு உள்ளன இவர்களது மன நிலையை புத்துணர்ச்சியூட்டி நல்லொழுக்கமுள்ள நற்பிரஜையாக மாற்ற பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இப் புனர்வாழ்வு நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்தன. கல்வி, தொழிற்பயிற்சி, விளையாட்டு, தியானப் பயிற்சி, சமய அனு'டானங்கள், சுகாதரம் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உட்பட பல செயற்பாடுகள் இவர்களது நலன்கருதி முன்னெடுக்கப்பட்டு வந்தன. இவர்களது புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென அரசாங்கம் 2.5 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

தவறான வழியில் நடாத்தப்பட்ட இவர்களுக்கு அரசாங்கம் புனர்வாழ்வு அளித்து மீள சமூகத்துடன் இணைத்தது மட்டுமல்லாது, அவர்கள் தொடர்ந்து தமது வாழ்வை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்காக பல உதவித் திட்டங்களையும் வழங்க முன்வந்தது. சுய தொழில் கடன், குறைந்த வட்டிவீதக்கடன், அரசாங்க வேலைவாய்ப்புக்களை வழங்கள், தொழிற்பயிற்சிகளை வளங்குதல் போன்ற பல அனுகூலம் மிக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது.



## கடன் உதவிகள்

சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களுக்கு பயனளிக்கும் முகமாக சுயதொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோருக்கு குறைந்த வட்டிவீதக் கடனவுதவியை அரசாங்கம் வழங்கியது. இக் கடனுதவியானது சிறிய அளவிலான வியாபாரம், விவசாய நடவடிக்கைகள், குடிசைத் கைத்தொழில்கள் போன்ற தொழில் முயற்சிகளை மேற்கொள்வொருக்கு வழங்கப்பட்டது. இவர்களுக்கு 250,000/= ரூபா கடன் தொகையானது 4% வீத வட்டிக்கு 10 வருகால மீளச் செலுத்துகை காலவ றையறையில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது முன்னாள் புலி உறுப்பினர்களின் குடும்பங்களில் வாழ்வாதாரத்தை உயர்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும், தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும் வழங்கப்பட்டது.

விளையாட்டு இதைத்தவிர முன்னாள் புலி உறுப்பினர்களில் விளையாட்டில் திறமை மிக்கவர்களுக்கும் அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்க தவறவில்லை. அண்மையில் விளையாட்டில் திறமைமிக்கவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விசேட விளையாட்டுத் திட்டமும் அமுல்படுத்தப்பட்டது. விளையாட்டில் திறமைமிக்க 131 முன்னாள் புலி உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட அவர்களை தேசிய அணிகளில் பங்கொள்ளவைக்கும் முகமாக பல பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு காற்பந்து, தடகள விளையாட்டுகள், நீச்சல், கரப்பந்து, கிரிகெட், துப்பாக்கிச் சூடு, பூப்பந்து, பாரம் தூக்குதல், கராட்டி, கபடி, சதுரங்கம் மற்றும் கெரம் போன்ற தெரிவு செய்யப்பட்ட 12 விளையாட்டுக்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படுவது மட்டுமல்லாது, சர்வதேச மற்றும் தேசிய வெற்றிகளையும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது.

# த்தில்
# ம்



## மொழித் திறன்கள்

இவர்களுக்கு தொழிற்பயிற்சி மட்டுமல்லாது சிங்கள மொழியை கற்றுக்கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டமும் வகுப்பட்டிருந்தது. இதன் மூலம் இவர்களது தொடர்பாடல் மற்றும் தொழிற் திறமைகளும் வளர்க்கப்பட்டன. இப் பயிற்சியானது தேசிய மொழிப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்டது. இவர்கள் நாட்டின் எப்பாகத்திற்கும் சென்றும் தொழில்புரியும் திறனும் இதன்மூலம் ஏற்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள், உத்தியோகபூர்வ மொழிகள் சட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியர்களுக்கு கட்டாய மொழிகள் ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொழிற்பயிற்சிகள்

இவர்களது எதிர்கால வாழ்வின் நலனைக்கருத்திற் கொண்டு தச்சுத் தொழில், மேசன், நீர் குழாய் திருத்தம் மற்றும் மின் கம்பியிணைப்பு போன்ற தொழிற் பயிற்சிகளும் தகைமை மிக்க ஆசிரியர்களால் வழங்கப்பட்டது. அவர்களது விருப்பத்திற்கும், திறமைக்குமேற்ற வகையில் இத் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப் பயிற்சிகளில் அவர்களது திறமைக்கேற்ப தேசிய தொழிற்கல்வி தகுதி நிலை I-II மற்று III என சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சென்று வேலை செய்யக்கூடிய வகையில் இத் தொழிற்பயிற்சிகள் அமையப்பெற்றுள்ளன.

46 வகையான தொழிற்பயிற்சிகள் புனர்வாழ் முகாங்களில் வழங்கப்படுகின்றன. இதைத்தவிர முன்னாள்புலி உறுப்பினர்களுக்கு இலங்கையில் சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவில் இணைவதற்கு இலங்கை அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. புனர்வாழ்வு நிலையங்களில் பல்வேறு பயிற்சிகளை பெற்று விடுதலையாகி வரும் எமது உறவுகள் இன்று சமுதாயத்தில் பாரிய தாக்கம் செலுத்தும் வேலை வாய்ப்பு பிரச்சினைக்கு முகம் கொடுக்காது தமது சொந்த உழைப்பில் முன்னேறி வருகின்றனர். இதற்க்கு அடிகோலியது அரசாங்கத்தின் முன்னால் புலிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையே படித்து விட்டு தொழிலுக்காக போராட்டம் நடத்தும் காலகட்டத்தில் புனர்வாழ்வு நிலையத்தை விட்டு வெளியேறும் போதே கையில் தொழிலுடன் செல்கின்றனர்.

## கல்வி

இவை அனைத்தையும் விட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு கல்வியை தொடர வாய்ப்பளித்தமை மிகவும் வரவேற்புக்குரிய விடயமாகும். தமது கல்வியை இடையில் நிறுத்திக்கொண்டவர்கள் தமது கல்வி தொடர்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. கல்வித் திணைக்களத்துடன் இணைந்து விசேட செயற்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்மூலம் பல சிறுவர் போராளிகள் தமது பாடசாலைக் கல்வியத் தொடர வாய்ப்பு ஏற்பட்டது. க.பொ.த (சா/த) பரீட்சை மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சை ஆகியவற்றில் இவர்கள் தோற்றினர். இவற்றில் தேர்ச்சிப் பெற்றவர்கள் பல்கலைக்கழத்திற்கான அனுமதியையும் பெற்றுள்ளனர்.

முன்னாள் சிறுவர் போராளிகளின் க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்-2010

| | மாணவர்களின் எண்ணிக்கை | தகைமை பெறாதவர்கள் | க.பொ.த (உ/த)க்கு தகைமை பெற்றவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பெண்கள் | 38 | 21 | 17 | 38 |
| ஆண்கள் | 126 | 70 | 58 | 128 |
| மொத்தம் | 166 | 91 | 75 | 166 |

முன்னாள் சிறுவர் போராளிகளின் க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்-2011

| | மாணவர்களின் எண்ணிக்கை | தேர்ச்சி அடைந்தவர்கள் | தேர்ச்சி அடையாதவர்கள் | க.பொ.த (உ/த)க்கு தகைமை பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| பெண்கள் | 18 | 5 | 13 | 4 |
| ஆண்கள் | 44 | 16 | 28 | 11 |
| மொத்தம் | 62 | 21 | 41 | 15 |

முன்னாள் சிறுவர் போராளிகளின் க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள்-2011

| | மாணவர்களின் எண்ணிக்கை | பல்கலைகழகத்திற்கு அனுமதி பெற்றவர்கள் | தேர்ச்சி அடையாதோர் |
|---|---|---|---|
| பெண்கள் | 6 | 3 | 3 |
| ஆண்கள் | 298 | 40 | 258 |
| மொத்தம் | 304 | 43 | 261 |

புனர்வழ்வளிக்கப்பட்டோர் தொடர்பான விபரங்கள் - 2012 ஆகஸ்ட் 06



# இலங்கை பெண்களை ஜோர்தானில் பணிக்கமர்த்துவதில்லை என தீர்மானம்

ஜோர்தானில் இலங்கை பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதை, செப்டெம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வரை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் நூற்று ஐம்பது கோடி ரூபா அந்நியச் செலாவணியினை இலங்கை இழக்க வேண்டி நிலை ஏற்பட்டுள்ளது.

ஜோர்தானில் பணிக்கு அமர்த்தும் ஒவ்வெரு பணியாளர்களுக்கும் உரிய முகவர்கள், மீள பெறமுடியாத ஆயிரம் அமெரிக்க டொலர்களை வைப்புச் செய்ய வேணடும் என இலங்கை அரசாங்கம் நிபந் தனை விதித்தது.

இந்த நிதி ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரகத்தில் வைப்பிலிட வேண்டும் என விதித்திருந்த நிபந்தனையை ஜோர்தானிய வேலை வாய்ப்பு சங்கம் நிராகரித்துள்ளன. இந்த நிலையிலேயே, அந்த சங்கம் இலங்கை பணிப்பெண்களை ஜோர்தானில் பணிக்கு அமர்த்துவதில்லை என தீர்மானித்தது.

இந்த விடயம் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமால் சேனாதிலங்கார தகவல் தருகையில், ஏனைய மேற்காசிய நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் ஜோர்தான் சராசரியான வேதனத்தை வழங்கும் நாடாகவே திகழ்கின்றது. அங்கு பணிப்பெண்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சி னைகள் காரணமாக ஜோர்தானில் உள்ள இலங்கை தூதுவராலயம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கு வதாக தெரிவித்தார். உரிய முறையில் ஒப்பந்தம் நடை முறைப்படுத்த தவறுவதி னால் அனேகமான இலங்கை பணிப்பெண்கள் இலங்கை தூதுவராலயத்தில் சரணடைவதால் இந்த நிலமை மேலும் பிரச்சி னைகளை தோற்றுவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனாலேயே, இலங்கை பணிப்பெண்களை ஜோர்தானில் பணிக்கமர்த்துவோர் மீள பெற முடியாத ஆயிரம் அமெரிக்க டொலர்களை வைப்பிலிட வேண்டும் என்ற சட்டத்தை நடைமுறைப் படுத்தியதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் சுட்டிக் காட்டினார்.

## கனியவளங்களை கண்டறிய வான்வழி ஆய்வு

இலங்கையின் கனியவளங்கள் பற்றி வான்வழி ஆய்வை மேற்கொள்ளவுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் டாக்டர் எம்.ஜே.விஜயானந்த தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுக்கான செலவு 17 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இது ஒன்றரை வருடங்களில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1950 களின் பின் நடைபெறும் வான்வழி ஆய்வாக இது அமையும் எனவும் எம்.ஜே.விஜ யானந்த கூறினார்.

மண்ணில் ஆசனிக் நஞ்சு இருப்பதாகக் கூறப்படும் அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் முதலில் இந்த ஆய்வு நடைபெறும் எனவும் அவர் கூறினார்.

## யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் 'மக்' நிறுவனம்

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் மக் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் இணைந்துள்ளதாக யாழ். மாவட்ட செயலக கண்ணிவெடி அகற்றல் பிரிவு தெரிவித்துள் ளது.

நிதிப் பற்றாக்குறை காரணமாக கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் மனிதநேயச் செயற்பாடுகளிலிருந்து "டெனிஸ்" மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் விலகியிருந்தது.

இதனால் வளலாய், இடைக்காடு ஆகிய பகுதிகளில் முடங்கியிருந்த கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை 'மக்' நிறுவனம் மேற்கொள்ள வுள்ளது. இதற்கான ஆரம்ப செயற்பாடு களில் 'மக்' நிறுவனம் ஈடுபட்டது. எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 'மக்' நிறுவனம் தம்முடைய செயற்பாடுகளை முன்னெ டுக்கவுள்ளதாகவும் யாழ். மாவட்ட கண்ணிவெடி அகற்றல் பிரிவு கூறியுள்ளது.

அத்துடன், 'டெனிஸ்' கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் இணைந்திருந்த உள்ளூர் ஊழியர்களுக்கு 'மக்' நிறுவனம் தொழில்வாய்ப்பை வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ் குடாநாட்டில் அனேகமான இடங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு விட்ட போதிலும் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒருசில பகுதிகளில் இன்னமும் மிதிவெடி அபாயங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். குடாநாட்டில் உள்ள இறங்குதுறைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள இறங்குதுறைகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி இன்று தெரிவித்தார்.

புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம் (ஐ.ஓ.எம்) இதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாஷையூர் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி 50 மில்லியன் ரூபா செலவில் பாஷையூர் இறங்குதுறை புனரமைக்கப்படுகின்றது.

அத்துடன் மாதகல், சேந்தாங்குளம் பகுதியில் ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் 14 மில்லியன் ரூ[illegible] செலவில் புதிதாக இறங்கு துறையும் மீன் ஏல விற்பனை நிலையமும் பலநோக்கு மண்டபமும் அமைக்கப்படுகின்றது.

தாழையடிப் பகுதியில் 25 மில்லியன் ரூபா செலவில் புதிதாக ஐஸ் உற்பத்தி நிலையமும் 2 மில்லியன் ரூபா செலவில் உப்பு அரைக்கும் ஆலையும் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## ஆஸி. செல்ல முயற்சி: முகவரை சந்திக்கச் சென்ற கிளி. இளைஞன் கைது

அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல, முகவரை சந்திக்கச் சென்ற இலங்கை அகதியை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சியை சேர்ந்த நிரோஜன் (23) என தெரிவிக்கப்படுகிறது.

இவர் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்துள்ளார்.

இவர் அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் செல்வதற்காக, கரூரில் உள்ள முகவரை சந்திக்க, கரூர் பஸ் நிலையத்தில் நின்றுள்ளார்.

அங்கு ரோந்தில் ஈடுபட்டிருந்த கியூ பிரிவு பொலிசார், நிரோஜ னை பிடித்து விசாரித்ததில், மண்டபம் அகதிகள் முகாமை சேர்ந்தவர் என, தெரியவந்தது.

நிரோஜன் தற்போது மண்டபம், கியூ பிரிவு பொலிசாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார்.

## இலக்க தகடற்ற வான் திருமலையில் சிக்கியது

இலக்க தகடற்ற நிலையில் பயணித்த வானென்றை திருகோணமலை பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைப்பற்றியுள்ளனர்.

கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் பிரதேசத்தின் பிரபல அரசியல்வாதியொருவரின் மகனின் சுவரொட்டிகளைக் கொண்டு சென்ற நிலையிலேயே குறித்த வாகனம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பிரதேச பிரதம தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியினால் வழங்கப்பட்ட தகவலுக்கினங்கவே இலக்க தகடற்ற குறித்த வான் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, வாகனத்திலிருந்த சாரதி கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# இஞ்சி இருக்கா என்றால் புளி இருக்கு என்று சொல்லும் தந்திரசாலி கருணாநிதி

## சாடுகிறார் பழ.நெடுமாறன்

ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலமாக அதை உண்மையாக்கிவிட முடியும் என்று நினைப்பவர்களில் கருணா நிதி முதன்மையானவர்.

என்று சென்னையிலிருந்து வெளி வரும் ஜூனியர் விகடனில் பழ.நெடுமாறன் எழுதிய கட்டுரை யொன்றில் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

ஈழத்தில் போர் நடந்த காலத் தில் தமிழ்நாட்டின் முதலமைச் சராக இருந்த கருணாநிதி, மத்தியில் தனக்கு இருந்த அதி காரத்தைப் பயன்படுத்தி அதைத் தடுக்கவில்லை என்பது. தமிழக மக்கள் அவர் மீது வைக்கும் குற்றச்சாட்டு. அதற்கு பதில் சொல்வதற்கு முதுகெலும்பு இல் லாத அவர், "விடுதலைப்புலிகள் நடத்திய சகோதரச் சண்டை காரணமாகத்தான் இந்த இன அழிப்பு நடந்தது" என்று திரும்பத் திரும்பச் சொல்லித் திசை திருப்பப் பார்க்கிறார்.

இஞ்சி இருக்கா என்றால் இல்லை என்று சொல்லாமல், புளி இருக்கு என்று சொல்லும் வியா பாரத் தந்திரமே அவரிடம் இருக் கிறது. தமிழினப் பற்று கொஞ் சமும் இல்லை!

அவர் சொல்லும் சகோதரச் சண்டையை யார் தொடங்கி வைத்தது?

1984-ஆம் ஆண்டில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஈழப் போராளிகள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற கருத் தை அடிக்கடி வலியுறுத்தி வந்தார். அதற்காக, போராளி அமைப்புகளின் தலைவர்களுக்கு ஒரு பகிரங்கமான அழைப்பையும் விடுத்தார். குறிப்பிட்ட நாளில் தன்னை வந்து சந்திக்குமாறு அனைத்துப் போராளி இயக்கத் தலைவர்களுக்கும் தனித்தனியே கடிதங்களை அனுப்பினார்.

எம்.ஜி.ஆரின் இந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி செயல்பட் டார். எம்.ஜி.ஆர். குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாளில் தன்னைச் சந்திக்கும்படி போராளிகளின் தலைவர்களுக்கு கருணாநிதி அழைப்பு விடுத்தார்.

உண்மையிலேயே போராளி களை ஒன்றுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இருந்திருக்குமானால். எம்.ஜி.ஆர். அழைப்பு விடுவதற்கு முன்னர் அழைப்பு விடுத்திருக்கலாம். ஆனால், எம்.ஜி.ஆரின் அழைப்பு பற்றிய செய்தி வெளியானவுடன் போட்டிக்காக இவரும் ஒரு அழைப்பு விடுத்தாரே தவிர, உண்மையில் போராளிகளை ஒன்றுபடுத்தும் நோக்கம் இவருக்கு இல்லை. போராளிகள் அமைப்பு களை ஒன்றுபட விடாமல் பிளவு படுத்தும் வேலையைத் தொடங்கி வைத்தவரே கருணாநிதிதான்.

கருணாநிதியின் அழைப்பை டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ் போன்ற இயக்கங்கள் ஏற்றன. ஆனால், முதலில் அழைத்த எம்.ஜி.ஆரின் அழைப்பை ஏற்பது என முடிவு செய்து புலிகள் அவரைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் விளைவாக, புலிகள் இயக்கத்தின் மீது எம்.ஜி.ஆருக்கு இருந்த மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. புலிகளுக்கு இரண்டு கோடி ரூபாய் வழங்க அவர் முன்வந்தார். ஆனால், கருணா நிதி தன்னைச் சந்தித்த மூன்று போராளிகளோடு புகைப்படம் எடுத்துப் பத்திரிகைகளில் வெளியிட வைத்து விளம்பரம் தேடிக்கொண் டார்.

தனது பிறந்த நாளில் உண்டியல் மூலம் திரட்டப்பட்டப் பணத் தில் சில ஆயிரம் ரூபாய்களை இந்த இயக்கங்களுக்கு அளித்த தைத் தவிர, பெரிய அளவில் உதவுவதற்கு முன்வர வில்லை. அவர்கள் எம்.ஜி. ஆரையும் சந்திக்க இயலாதபடி செய்ததுதான் கருணாநிதி யின் சாதனையாகும்.


1985-ம் ஆண்டு ஏப்ரல் 10-ம் தேதி புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், டெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம், ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்ம நாபா, ஈரோஸ் தலைவர் பாலகு மார் ஆகியோர் ஒன்றுகூடிப் பேசி இலங்கை ராணுவத்துக்கு எதிரான ஆயுதப் போராட்ட நடவடிக்கை களை இணைந்து மேற்கொள்வது என முடிவு செய்து அறிக்கையும் வெளியிட்டனர். 1985-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற திம்பு மாநாடு வரை இந்த ஒற்றுமை நீடித்தது.

திம்பு மாநாட்டில் அனைவரும் ஒன்றுபட்டு முன்வைத்த கோரிக்கைகளை இந்திய அரசு விரும்ப வில்லை. எனவே, போராளி இயக்கங்களை மிரட்டி பிளவுபடுத் தத் திட்டமிட்டது. இதற்கான சதித் திட்டத்தை "றோ" உளவுத் துறை வகுத்தது.

# முழங்கை வலி

பாரங்களைத் தூக்கமுடியாதபடி முழங்கையில் வலி உண்டாகும். ஆனால் பாரம் தூக்குவதால் மட்டும் இவ்வலி வருவதில்லை. கைவிரல்களை மடித்து ஏதாவது ஒன்றைப் பற்றிப் பிடிக்கும்போது (உதாரணமாக கைலாகு கொடுப்பது, கதவின் கைப்பிடியைப் பிடித்து இழுப்பது) வலி ஏற்படுவதுண்டு. கைவலியைத் தவிர இவ்விடத்தில் வீக்கமோ, சினப்போ அல்லது விறைப்புத் தன்மையோ சேர்ந்திருப்பதில்லை என்பதை நோயுள்ளவர்கள் பலரும் அவதானித்திருப்பார்கள்.

முழங்கையின் வெளிப் புறத்தில் ஏற்படும் வலி பெரும்பாலும் கடுமையாக இருக்கும். ஆரம்பத்தில் பொறுக்கக் கூடியதாக இருக்கும் இவ்வலி காலகதி யில் (ஒரு சில வாரங்கள் முதல் சில மாதங்கள் வரை) கடுமையாக மாறும். நோய் கடுமையான நிலையில் முழங்கையின் சிறு அசைவு கூட வலியைக் கடுமையாக்கும். முழங்கையின் வெளிப்புற மொளி அருகே ஏற்படும் இந்த வலியை ஆங்கிலத்தில் tennis elbow என்பார்கள். காரணம் டெனிஸ் விளையாடுபவர்களிடம் அதிகம் ஏற்படுவதால் தான். ஆனால் டெனிஸ் விளையாடுவது மட்டுமே இந்நோய் வருவதற்குக் காரணமல்ல.




முன்னங்கைகளை அதிகம் உபயோகிக்க வேண்டிய தொழில் செய்பவர்களிலும் இது ஏற்படும். வர்ணம் பூசுவது, இறைச்சி வெட்டுவது, சுத்தியலால் தொடர்ந்து அடிப்பது, நெசவு, தட்டச்சு செய்வது போன்றவை சில உதாரணங்களாகும்.

உங்கள் முழங்கையின் வெளிப்புறம் திட்டாக தெரியும் மொளியில் இருக்கும் தசைநாண் உட்காயம் ஏற்படுவதாலேயே இந் நோய் ஏற்படுகிறது. இந்த தசைநாண் தான் உங்கள் கை விரல்கள் மற்றும் மணிக்கட்டு ஆகியவை சரியான முறையில் இயங்கு வதற்கு காரணமாயுள்ளன.

வலியைக் கவனத்தில் எடுக்காது அத்தகைய வேலைகளைச் தொடர்ந்தும் செய்தால் சவ்வு அறுந்துவிடவும் கூடும் என்பது எப்பொழுதாவது ஏற்படக் கூடிய ஆபத்தாகும்.

பலருக்கு இந்நோய் எந்தவித சிகிச்சையும் இல்லாது தானாகவே காலகதியில் குணமாகி விடும். ஆரம்ப நிலையில் அவ்விடத்தில் ஐஸ் ஒத்தடம் கொடுப்பது வலயைத் தணிக்க உதவும். வலிநிவாரணி மாத்திரைகள், மணிக்கட்டிற்கான பட்டி (Elbow Brace) ஆகியவையும் உதவக் கூடும்.

உங்கள் விரல்களுக்கும் மணிக்கட்டுக்குமான சில எளிமையான பயிற்சிகள் உங்கள் வலியைத் தணிக்க நிச்சயம் உதவும்.

**விரல்களை விரிக்கும் பயிற்சி**

மிகவும் சுலபமான ஒரு பயிற்சியானது ரப்பர் பான்ட் உதவியுடன் உங்கள் விரல்களை விரிக்கும் பயிற்சியாகும். ஒரு ரப்பர் பான்ட்டை உங்கள் நோயுற்ற கையின் விரல்களைச் சுற்றி அணியுங்கள். இப்பொழுது உங்கள் கை கோலியது போல தோற்றமளிக்கிறது அல்லவா? இனி விரல்களை அகட்டி மெதுவாகக் கையை விரியுங்கள்.

இவ்வாறு பத்துத் தடவைகள் செய்யுங்கள். சில நிமிட ஓய்வுக்குப் பின் மீண்டும் பத்துத் தடவைகள் செய்யுங்கள். மூன்றாவது தடவையும் அவ்வாறு செய்யுங்கள். இவ்வாறு காலை மாலை இரு தடவைகள் செய்ய வேண்டும்.

**இறுகப் பிடிக்கும் பயிற்சி**

இரண்டாவதாக விரல்களை இறுகப் பிடிக்கும் பயிற்சி செய்யுங்கள். சிறிய உருளை அல்லது பந்து ஒன்றை எடுத்து உள்ளங்கையில் வைத்து அழுத்திப் பிழிவது போல இறுகப் பிடியுங்கள். தொடர்ந்து பத்து முதல் பதினைந்து நிமிடங்களுக்கு தொடர்ந்து செய்யுங்கள். காலை மாலையாக தினமும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் செய்ய வேண்டும்.




**மணிக்கட்டை கீழ்நோக்கி இழுக்கும் பயிற்சி**

உள்ளங்கை கீழே பார்க்குமாறு உங்கள் ஒரு கையை முன்புறமாக நீட்டிப் பிடியுங்கள். இப்பொழுது மறு உள்ளங்கையால் அதைத் தாங்குவது போலப் பிடியுங்கள். இனி மேலுள்ள கையை மணிக்கட்டருகில் கீழ்ப்புறமாக அழுத்தி மடியுங்கள். 15 முதல் 30 செகண்டுகளுக்கு அவ்வாறே பிடித்த பின் தளர்த்துங்கள். மூன்று தடவை திரும்பச் செய்யுங்கள். தினமும் மூன்று தடவைகள் அவ்வாறு திரும்பச் செய்ய வேண்டும்.

**மணிக்கட்டுப் பயிற்சி**

உங்களது உள்ளங்கை மேலே பார்க்குமாறு ஒரு முன்னங்கையை மேசை மீது வையுங்கள். பயிற்சி பாண்ட் ஒன்றை கைகளால் பற்றிக் கொண்டு மறுகையால் பாண்டடைப் பற்றிய கையின் மணிக்கட்டுப் பகுதியை உங்கள் உடலை நோக்கி இழுங்கள். பின் கையை மெதுவாக பழைய நிலைக்குக் கொண்டு செல்லுங்கள். உள்ளங்கை கீழே பார்க்குமாறு இப்பயிற்சியை மீண்டும் செய்யுங்கள். இவ்வாறு பத்துத் தடவைகள் செய்யுங்கள். தினமும் மூன்று தடவைகள் அவ்வாறு திரும்பச் செய்ய வேண்டும்.

**முழங்கை பயிற்சி**



படத்தில் காட்டியபடி ஒரு காலுக்கு முன் மற்றக் காலை வையுங்கள். பயிற்சி பாண்ட்டின் ஒரு முனையை பின்னுள்ள காலுக்குக் கீழே வையுங்கள். மறு முனையைக் உள்ளங்கை மேலே பார்க்குமாறு கையால் பற்றி இழுங் கள். படத்தில் உள்ளபடி உள்ளங்கை தோள் மூட்டு வரை உயருமாறு இழுங்கள். மெதுவாக கையைப் பழைய நிலைக்கு செல்லவிடுங்கள். உள் ளங்கை கீழே பார்க்குமாறு இப்பயிற் சியை மீண்டும் செய்யுங்கள். ஒவ்வொரு முறையும் பத்து தடவை வீதம் தினமும் மூன்று தடவைகள் செய்யுங்கள்.

**முன்கையை முறுக்கும் பயிற்சி**

படத்தில் காட்டியவாறு உங்கள் முன்னங்கையை மேசையில் உள்ளகை கீழே பாரக்குமாறு வைத்தபடி ஒரு சுட்டியலைப் பிடியுங்கள். இப்பொழுது மேற்புறமாகவும் கீழ்ப்புறமாகவும் மாறிமாறி மெதுவாகச் சுற்றுங்கள். வலிதோன்றும் வரை மட்டும் சுற்றுங்கள். வலிதோன்றினால் நிறுத்துங்கள். ஒவ்வொரு தடவையும் பத்துத் தரங்களாக மூன்று தடவைகள் செய்யுங்கள். சுட்டியலின் பாரம் அதிகமாகிச் சுற்றுவது கடினமாக இருந்தால் சுட்டியலின் தலைப் பக்கமாககையை நெருக்கிப்பிடியுங்கள்.




**ஊசி மருந்து**

பயிற்சிகளைச் செய்து, வலிநிவாரணி மருந்துகளையும் உபயோகித்த போதும் வலி தணிய வில்லை எனில் உங்கள் வைத் தியர் முழங் கையின் வலியுள்ள பகுதியில் ஊசி மருந்தை ஏற்றக்கூடும். ஊசி மருந்தானது வலியுள்ள பகுதியில் அழற்சியைத் தணித்து நோயைக் குணமாக்கும். ஊசிபோட்டு வலி தணிந்த பின்னர் குணமாகிவிட்டது எனக்கை விட்டுவிடாதீர்கள். தசைகளை நீட்டி விரிக்கும் பயிற்சிகளும், முழங்கையின் செயற்பாட்டு எல்லையை அதிகரிக்கும் பயிற்சிகளும், தசைகளைப் பலப்படுத்தும் பயிற்சிகளையும் தொடர்ந்து செய்ய வேண்டும். படத்தில் முழுங்கையை நீட்டியபடி மணிக்கட்டை மடிக்கும் பயிற்சி காட்டப்பட்டுள்ளது. 90 முதல் 95 சதவிகிதமானவர்களுக்கு முன் கூறிய சிகிச்சைகளுடன் நோய் குணமாகிவிடும். மேற்கூறிய வழிகளைப் குறைந்தது 6 மாதங்கள் கடைப்பிடித்தும் வலி தணியவில்லையெனில் மிகுதி 5 சதவிகிதமானவர்களுக்கு சத்திரசிகிச்சை தேவைப் படலாம். இதன் போது நோயுற்ற தசைநார்த் துண்டை அகற்றி நல்ல நிலையிலுள்ளதை எலும்பில் பதிய வைப்பார்கள்.

## ஆரோக்கிய நாதம்

## பாதங்களைப் பயமுறுத்தும் கால் ஆணி



பாதங்களைத் தாக்குவதில் பித்தவெடிப்பிற்கு அடுத்தபடியாக இருப்பது கால் ஆணி. இது பாதத்தைத் தரையில் வைக்க முடியாத அளவிற்கு பிரச்சனையை ஏற்படுத்தும். பாதத்தில் சிறு கொப்புளங் கள் போல உண்டாவதைத்தான் கால் ஆணி என்று கூறுகிறார்கள்.

**கால் ஆணி ஏற்படக் காரணம்:**

அதிகமான உடல் அழுத்தம்.
கால் ஆணி உடையவர்களின் செருப்புகளைப் பயன்படுத்துதல்.
காலுக்குப் பொருந்தாத அளவுகளில் செருப்பு அணிதல்.
வெறுங்காலுடன் நடத்தல்.

**கால் ஆணிக்கு உரிய சிகிச்சை:**

கால் ஆணி ஏற்பட்டு விட்டால் அதனை உடனடியாகச் சரி படுத்தி விட வேண்டும். இல்லா விட்டால் கால் முழுவதும் பரவி நடக்க முடியாத நிலைக்குத் தள்ளிவிடும். கால் ஆணி ஏற்பட்ட உடனேயே பூண்டை நசுக்கி அதன் சாறை காலில் ஆணி இருக்கும் இடங்களில் தடவி வரவும்.

இரவுப் பொழுதில் பூண்டை நசுக்கி காலில் வைத்து துணியால் கட்டுப்போட்டுவிட்டு காலையில் எடுத்துவிடலாம்.

## முருங்கையின் மருத்துவப் பயன்கள்

பச்சைக் கீரைகளில் எவ்வளவோ எண்ணிலடங்கா பயன்கள் இருக்கின்றன. நாம்தான் அதனை முறையாகப் பயன்படுத்துவ தில்லை. கீரை வகைகளை உணவோடு சேர்க்கச் சொல்லி சும்மாவா சொன்னார்கள் நம் மூதாதையர்கள். கீரை வகைகளில் இரும்புச் சத்து கணிசமாக உள்ளது.அந்த வகையில் முருங்கைக் கீரையின் பயன்களைப் பார்ப்போம்.முருங்கை மரம் முழுவதும் மனிதனுக்கு பயனளிக்கிறது.

முருங்கைப் பூ மருத்துவ குணம் கொண்டது. முருங்கை கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடி த்து வந்தால் உடல் சூடு தணியும். வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மந்தம், உட்சூடு, கண்நோய், பித்தமூர்ச்சை இவ்ற்றை நீக்கும் குணம் படைத்தது முருங் கைக் கீரை.

சாதாரணமாக வீட்டுக் கொல்லைகளில் தென்படும் முருங்கை மரத்தை, மருத்துவ பொக்கிஷம் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இது எண்ணற்ற வியாதிகளுக்கு பல வகைகளில் மருந்தாகிறது. அதுபற்றி சற்று விரிவாக காண்போம்.

இது ஒரு சத்துள்ள காய். உடலுக்கு நல்ல வலிமையைக் கொடுக்க வல்லது. இதன் சுபாவம் சூடு. ஆதலால் சூட்டு உடம் புக்கு ஆகாது. இதை உண்டால் சிறுநீரும் தாதுவும் பெருகும். எனவேதான், கோழையை அகற்றும். முருங்கைக்காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும். இதை நெய் சேர்த்தோ அல்லது புளி சேர்த்தோ சமைப்பது நலம்.

முருங்கைப் பட்டையை நீர்விட்டு அரைத்து வீக்கங்க ளுக்கும் வாயு தங்கிய இடங்களுக்கும் போடலாம். முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கி விட்டு பின் மிளகு இரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும். அதே வேளையில் சிறு நீரைப் பெருக்கும்.

முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் இரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல இரத்தம் ஊறும். பல் கெட்டிப்படும். தோல் வியாதிகள் நீங்கும். முருங்கைப்பட்டை, உலோகச் சத்துக்கள் நிறைந்தது. உணவில் கலந்த விஷத்துக்கும் நரம்புக் கோளாறுக்கும் இது நல்ல மருந்து.

கடுமையான இரத்த சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் ஆகிய வியாதிகளுக்கெல்லாம் முருங்கைக் காய் கை கண்ட மருந்து.

முருங்கைக் காயை வேக வைத்து கொஞ்சம் உப்பு சேர்த்துச் சாப்பிடலாம். முருங்கைக் காய் சாம்பார் எல்லோருக்கும் பிடித்த மானதே. இந்த சாம்பார் சுவையானதாக மட்டும் இருந்து விடாமல் மலச்சிக் கல், வயிற்றுப் புண், கண் நோய் ஆகிய வற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கை காயை உணவாக உபயோகித் தால், இரத்தமும் சிறுநீரும் சுத்தி அடைகின்றன. வாய்ப்புண் வராதபடி பாதுகாப்பு உண்டாகிறது. முருங்கைக்காய் சூப் காய்ச்சல், மூட்டு வலியையும் போக்க வல்லது.

முருங்கை விதையைக் கூட்டு செய்து சாப்பிடலாம். இது மூளைக்கு நல்ல பலத்தை தரும். தாது விருத்தியை உண்டு பண்ணும். ஆனால் மலபந்தத்தைச் செய்வதில் முருங்கை விதைக்கு முதலிடம் தரலாம்.

மேலும் இந்தப் பூவுக்கு தாது விருத்தி செய்யும் குணம் உண்டு. முருங்கைப் பூ உஷ்ணத்தை உண்டு பண்ணக் கூடியது தான் என்றாலும் அதனால் கெடுதல்கள் எதுவும் இல்லை. முருங்கைப் பிசினில்



அரை லீற்றர் நீர் விட்டு புதுப் பாண்டத்தில் வைத்திருந்து காலையில் இரண்டு அவுன்ஸ் நீருடன் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் தாது கெட்டிப்படும்.

முருங்கை இலை சாறுடன் பால் கலந்து சாப்பிட்டுவந்தால், இரத்த சுத்தியும், எலும்புகளையும் வலுப்படுத்தும். இதில் கர்ப்பிணிகளுக்கு தேவையான கால்சியம், அயம், வைட்டமின் உள்ளது.

கர்ப்பையின் மந்தத் தன்மையை, பிரசவத்தை துரிதப்பட்த்தும். இதன் இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தம், தாய்ப் பால் சுரப்பதை அதிகப்படுத்தும் ஆஸ்துமா, மார்சளி, சயம் போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு முருங்கை இலை சுப் நல்லது. முருங்கை இலை இரத்த விருத்திக்கும், விந்து விருத்திக்கும் சிறந்தது.

முருங்கைக்காய் இருதயத்தை வலுப் படுத்துவதுடன், இருதய நோய்களை போக்கி இரத்தவிருத்தி தாது விரித்திசெய்யும். முருங்கை இலை சாறுடன் தேனும், ஒரு கோப்பை இளநீரும் கலந்து பருக மஞ்சகாமாலை, குடலில்ஏற்படும் திருகுவலு, வயிற்றுப் போக்க கட்டுபடும். விதையில் இருந்து என்னை தயாரித்து வாயுப்பிடிப்பு, மூட்டுவலிகளில் பயன்படுத்தலாம் முருக்கைவேரில் இருந்து சாறெடுத்து பாலுடன் சேர்த்துப் பருகிவர காசநோய், கீழ்வாயு, முதுகுவலி குணப்படும்.

முதலில் இந்த வேட்டை நாய்கள் எங்கிருந்து வந்தன என்பதை விலங்குகள் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் சிறிது நேரத்திற்குள் எல்லாம் விளங்கி விட்டது. நெப்போலியன் நாய்களிடம் இருந்து விலக்கி இரகசியமாக வளர்த்துப் பழக்கிய நாய்க் குட்டிகள்தான் அவை. இன்னும் பூரணமான வளர்ச்சி பெறாதவை தான் அவை என்றாலும், பெரிதாக இருந்தன. ஓநாய்கள்போல அச்சுறுத்துபவையாக இருந்தன. நெப்போலியனை நெருங்கிச் சுற்றி வந்தன அவை. அந்த நாட்களில் ஜோன்ஸைக் கண்டு நாய்கள் வாலாட்டுவது போலவே, அவை இப்போது நெப்போலியனைக் கண்டு வாலாட்டியதை கவனித்தன விலங்குகள் எல்லாம். தன் நாய்கள் பின்தொடர நெப்போலியன் மேடைமேல் ஏறி நின்று கொண்டது.

கிழட்டுத் தளபதி தன் கனவைப் பற்றிச் சொல்ல அன்றொருநாள் அந்த மேடையின் மேல்தான் ஏறிநின்றது. இனி ஞாயிற்றுக் கிழமைக் கூட்டங்களே அவசியமில்லை, பொழுதை வீணாக்கிய அந்தக் கூட்டங்கள் இனி நடக்காது. பண்ணை சம்பந்தமான நடைமுறைப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் பன்றிகள் அடங்கிய ஒரு வேலைக் கமிட்டி தீர்மானித்து முடிவு செய்யும். அந்தக் கமிட்டிக்கு நானே தலைமை வகிப்பேன். இரகசியமாகக் கூடுகிற இந்தக் கமிட்டிக் கூட்டங்களின் முடிவுகள் மட்டும் மற்ற விலங்குகளுக்கு உரிய காலத்தில் அறிவிக்கப்படும். ஆனால் ஞாயிறன்று காலை நேரத்தில் வழக்கம் போல விலங்குகள் ஒன்று சேர்ந்து இங்கிலாந்தின் விலங்குகள் பாட்டைப் பாடும், வாரத்தில் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிய உத்தரவுகள் கூட அந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்படும். மற்றபடி எதைப் பற்றியும் விவாதங்கள், சமாதானங்கள், எதுவும் இராது என்று அறிவித்தது நெப்போலியன்.




ஸ்னோபால் அடித்துத் துரத்தப்பட்டதே பெரிய அதிர்ச்சியாக இருந்தது விலங்குகளுக்கெல்லாம். அதைத் தொடர்ந்து வந்த இந்த அறிக்கையும் அதிர்ச்சி தருவதாகத்தான் இருந்தது. எல்லையற்ற கவலையில் ஆழ்ந்து மயங்கித் திகைத்தன விலங்குகள் எல்லாம். சரியான வார்த்தைகளும் பதப் பிரயோகங்களும் தெரிந்திருந்தால் பல விலங்குகள் இதற்கெல்லாம் ஆட்சேபித்திருக்கக்கூடும். பாக்ஸருக்குக்கூட இந்த அறிக்கை தெளிவில்லாத ஒரு மனக் குழப்பத்தையும் துன்பத்தையும் தருவதாக இருந்தது. காதை நிமிர்த்திக்கொண்டு, பிடரியைச் சிலிர்த்துக்கொண்டு, தன் சிந்தனைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள முயன்றது பாக்ஸர்.

ஆனால் கடைசியில் பார்க்கும்போது சொல்வதற்கு விஷயம் எதுவும் அகப்படவில்லை அதற்கு. ஆனால் பன்றிகளிலேயே சில பலதரப்பட்ட வார்த்தைகளை உரக்கக் கொட்டின. (நாளை)

# உந்தி–பறத்தல் விளையாட்டு



உந்தி என்பது வயிற்றுக் கொப்புள். கொப்புள் பறக்கும்படி சுழல்வது உந்தி பறத்தல். உந்தி-பறத்தல் விளையாட்டை எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் தன் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். பாடிக்கொண்டே பறப்பது உந்தி - பறத்தல்.

இரண்டு சிறுமியர் ஒருவர் கையை மற்றொருவர் பிடித்துக்கொண்டும், கால்களால் ஒருவரை ஒருவர் உதைந்து கொண்டும் சுற்றுவது உந்திப் பறத்தல். கைகளைப் பிடிக்கும்போது வலக்கையை வலக்கையாலும், இடக் கையை இடக்கையாலும் எதிரெதிர் நின்று பிடித்துக்கொள்வர்.

இதனால் கைகள் பின்னலிட்டது போல் இருக்கும். பின்னர் வலப்புறமாகச் சிறிது நேரமும், இடப்புறமாகச் சிறிது நேரமும் சுழல்வர். இப்படிச் சுழலும்போது பாட்டுப் பாடிக்கொண்டே சுழல்வர்.

# சிறுவர் அமுதம்

## இன்னொரு பூமி இருக்குமா?


நமது பால்வீதியில் மட்டும் 10 ஆயிரம் கோடி கிரகங்கள் இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதில் வியாழன் போன்ற வாயுக் கோள கிரகங்கள் 600 கோடி இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பூமியைப் போன்று 10 இலட்சம் கிரகங்கள் இருக்கலாம் என்று டெப்ராபிசர் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

தற்போது ஐந்து கிரகங்களில் பூமியைப் போன்று தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 50 கிரகங்களில் உயிரினம் இருக்க வாய்ப்பிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மெக்சிகோ அருகே விழுந்த ஒரு விண்கல்லில் சர்க்கரைப் படிவு காணப்பட்டிருப்பதால், உயிரினம் உள்ள அயல் கிரகம் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அயல்கிரகங்களில் மனிதர்களைப் போன்ற அறிவு மிக்க உயிரினங்கள் இருக்கின்றனவா? என்று கண்டுபிடிப்பதற்கான திட்டத்தை அமெரிக்கா செயல்படுத்தி வருகிறது. நமது பூமியின் கடலின் அடியில் உள்ள எரிமலைகளிலும், வடதுருவப் பனிப் பிரதேசத்திலும், வறண்ட பாலைவனங்களிலும் நுண்ணுயிரிகள் இருப்பதைப் போல, விண்வெளியில் உள்ள அயல்கிரகங்களிலும் உயிரினங்கள் ஏற்கனவே தோன்றி வாழ்ந்து கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக டெப்ராபிசர் தெரிவித்துள்ளார்.

பூமியில் இருந்து 44 ஒளி வருட தூரத்தில் உள்ள ஹஉர்சா மேஜர் என்ற நட்சத்திரத்தை ஒரு கிரகமானது, சூரியனை பூமி சுற்றிவரும் தூரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது.அக்கிரகத்தில் தண்ணீரும், உயிரினங்களும் காணப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

# வரைவோம் வாருங்கள்!




## விடுகதைகள்




1. மண்டையில் போட்டால் மகிழ்ந்து சிரிப்பான். அவன் யார்?
2. நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?
3. கணுக்கால் நீரில் கரடி நீச்சல் போடுது. அது எது?
4. மரம் வாழ்பவனுக்கு முதுகிலே மூன்று சூடு. அது என்ன?
5. ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை. அது என்ன?

விடைகள்:
1.தேங்காய் 2.தலைமுடி
3.தவளை 4.அணில்
5.மிளகாய்

## ராட்டு பூட்டு விளையாட்டு

இந்த விளையாட்டு அண்மைக் காலம் வரையில் ராட்டு-பூட்டு என்னும் பெயருடன் விளையாடப்பட்டு வந்தது. இராட்டினம் பூட்டியது போல் சுழலும் ஆட்டத்தை ராட்டு-பூட்டு என்றனர். ராட்டு பூட்டு விளையாட்டில் மற்றொரு வகையும் உண்டு. படத்தில் உள்ளது போல் ஒருவரோடொருவர் தோளில் கைகளைக் கோத்துக்கொண்டு சுழல்வர். இரண்டு பேர் ஆட்டம் இது. ஒருவர் மற்றொருவர் கைகளைப் பிடித்துக்கொள்வார். இருவரும் தம் கால்களால் மற்றவர் கால்களில் உதைந்துகொள்வர். வட்டமாகச் சுற்றுவர்.



சுடோக்கு எண் 43 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 3 | 8 | 4 | 7 | 5 | 6 |
| 7 | 8 | 4 | 9 | 5 | 6 | 2 | 3 | 1 |
| 3 | 5 | 6 | 2 | 7 | 1 | 4 | 8 | 9 |
| 5 | 6 | 1 | 7 | 4 | 3 | 8 | 9 | 2 |
| 9 | 2 | 7 | 5 | 1 | 8 | 3 | 6 | 4 |
| 4 | 3 | 8 | 6 | 2 | 9 | 1 | 7 | 5 |
| 6 | 7 | 5 | 1 | 3 | 2 | 9 | 4 | 8 |
| 8 | 1 | 3 | 4 | 9 | 5 | 6 | 2 | 7 |
| 2 | 4 | 9 | 8 | 6 | 7 | 5 | 1 | 3 |

சுடோக்கு எண் 44

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | | | 2 | | 5 | | |
| | | 2 | | | 3 | | | 6 |
| 5 | | | | | | 9 | 2 | |
| 6 | | | 2 | | | | 1 | 7 |
| | | | 1 | | 9 | | | |
| 2 | 1 | | | | 4 | | | 9 |
| | 2 | 5 | | | | | | 4 |
| 4 | | | 7 | | | 3 | | |
| | | 7 | | 3 | | | 6 | 1 |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# க.பொ.த.(உயர்தர) விடைத்தாள் திருத்தும் பணிகள் மேலும் தாமதமாகலாம்

அண்மையில் நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகள் பல்கலைக்கழக போதனாசிரியர் களின் வேலை நிறுத்தம் காரண மாக மேலும் தாதமாகலாம். விடைத்தாள் திருத்தும் பணி- களை எப்போது ஆரம்பிப்பதென இதுவரை முடிவு செய்யவில்லை என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

வேலை நிறுத்தம் செய்யும் போது விடைத்தாள்களை திருத்த மாட்டோமென்று பல்க லைக்கழக போதனாசிரியர்கள் மறுத்து வரு வதால் திருத்தும் பணிகளை ஆரம்பிக்க முடியாமல் இருப்ப தாகவும் பரீட்சைகள் ஆணை யாளர் தெரிவித்தார்.

# முதியவர்களுக்கான மாதாந்த உதவித் தொகை நிறுத்தம்

(சண்டிலிப்பாய்)

வயோதிபர்களுக்கு வழங்கப் பட்டு வந்த பொதுசன மாதாந்த உதவிப் பணத்தொகை நிறுத்தப் பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்டன. வேறு வருமானமற்ற இந்த முதியவர்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

எழுபது வயதிற்கு மேற்பட்ட அனைத்து வயோதிபர்களுக்கும் சமூக சேவை அமைச்சினால் மா தாந்தம் ஆயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனை யடுத்து இதுவரை வழங்கப்பட்டு வந்த மாதாந்த பொதுசன உதவிப் பணம் நிறுத்தப்பட்டது. எனினும் சமூக சேவை அமைச் சின் ஆயிரம் ரூபா அவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. மூன்று மாதங் களாக முதியவர்களுக்கு எந்த வித நிதி உதவியும் இன்றி மிகுந்த சிரமங்களுடன் வாழ்கி றார்கள்.

தற்போதைய பொருளா தார நிலையில் உறவினர்க ளாலும் கைவிடப்பட்ட சில முதி யோர்கள் மாதாந்த பொதுசன உதவிப் பணத்தை எதிர்பார்த்தி ருக்கிறார்கள்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி

(சண்டிலிப்பாய்)

ஆறுதல் நிறுவனத்தின் அனுசர ணையுடன் வலிகாமம் வலயத்திற் குட்பட்ட 150 முன்பள்ளி ஆசிரி யர்களுக்கு வலிகாம வலய கல்வித் திணைக்களத்தினால் முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக் கப்பட்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர் களுக்கு முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறி கட்டாயமாக்கப் பட்டுள்ளமை அறிந்ததே.

பல்வேறு காரணங்களினால் இதுவரை முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியினை தொடர முடியாத ஆசிரியர்கள் மேற்படி வலயத்தில் உள்ளனர். இவர்களி லிருந்து 150 பேர் தெரிவு செய்யப்பட்டு டிப்ளோமா கற்கை நெறி வழங்கப்படவுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி மானிப்பாய் மற்றும் தாவடி ஆகிய இரண்டு இடங் களில் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருச்சியில் இலங்கை மாணவர்களை எதிர்த்து 'நாம் தமிழர்' கலாட்டா

திருச்சியிலுள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் இலங்கை மாணவர்களின் நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இலங்கையர்களுக்கு கலாசார நிகழ்ச்சி நடாத்த அனுமதித்த தைக் கண்டித்து நாம் தமிழர் இயக்க ஆதரவாளர்கள் அக் கல்லூரிக்குள் முற்றுகையிட்டு பெரும் கலவரங்களை உருவாக் கினார்கள். இலங்கைத் தமிழர் கள் பங்குபற்றும் சகல நிகழ்ச்சி களையும் ரத்துச் செய்யுமாறு நாம் தமிழர் இயக்க ஆதரவாளர் கள் வலியுறுத்தினர்.

இந்தக் கல்லூரி 1996ஆம் ஆண்டு இசை, நடனம் ஆகியவற் றைப் போதிப்பதற்காக ஆரம்பிக் கப்பட்டது. திருச்சியிலுள்ள கத்தோ லிக்க திருச்சபையினரால் இக் கல்லூரி நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையைச் சேர்ந்த கத்தோலிக்கத் தமிழ் பெண்ணொருவரே இலங்கை மாண வரை கலைக் கல்லூரிக்கு நிகழ் ச்சிகள் நடாத்த அழைத்து வந்தார்கள் எனக் கூறப்படுகின்றது..

# சார்லி சாப்ளினின் சகோதரன் சிட்னி சாப்ளின்

சிட்னி சாப்ளின் சாப்ளினைத் தெரிந்த பலருக்கும் அவரது சகோதரன் சிட்னி சாப்ளினைத் தெரியாது, ஒரு நிழலைப்போல சாப்ளின் கூடவே இருந்து அவரது வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் சிட்னி,

சாப்ளினுக்குக் கிடைத்த திரைப்பட வாய்ப்புகள், மற்றும் அவரது பொருளாதார வளர்ச்சி யாவும் சிட்னி உருவாக்கிக் கொடுத்ததே,

சார்லி சாப்ளினை விட நான்கு வயது மூத்தவர் சிட்னி, அவரது அப்பா யார் எனத் தெரிய வில்லை, அம்மா ஹானா தனது பதினாறாவது வயதில் ஹவாக்ஸ் என்ற இளைஞரோடு பழகித் திருமணம் செய்து கொள்ளா மலே அவரைப் பெற்று எடுத்ததாக கூறுகிறார்கள்,

ஹானா தனது 19 வயது வயதில் சார்லஸ் சாப்ளின் என்ற பாடகரைத் திருமணம் செய்து கொண்டார், அவர்களது முதல் பையன் தான் சார்லி சாப்ளின், தனது அப்பா யார் எனத் தெரியாமல் வளர்க்கபட்ட சிட்னி குடும்ப வறுமை காரணமாக தனது பனிரெண் டாவது வயதிலே கப்பலில் வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டார், கடினமான வேலை, அதிகமான குளிர், இவற்றால் உடல் நலிவுற்று நோயுற்ற போதும் அவர் வேலை செய்து சம்பாதித்து தனது குடும்பத்திற்கு தொடர்ந்து பணம் அனுப்பி வந்தார்

1891ல் ஹானா தனது கணவரைப் பிரிந்து குழந்தை களுடன் தனித்து வாழ முற்பட் டார், அதனால் குடும்பம் நிலைகுலையத் துவங்கியது, குடிப் பழக்கம் ஹானாவைப் பற்றிக் கொண்டது, கூடுதலாக மனப்பிறழ்விற்குள் உள்ளானார். 1901ல் சார்லஸ் இறந்துவிடவே அந்தக் குடும்பம் நிர்க்கதி யாகியது,

சிட்னியின் வருமானம் தான் குடும்பத்தின் ஒரே ஆதரவு, தனது தம்பி சார்லி சாப்ளினை சிட்னி மிகவும் நேசித்தார், சாப்ளினின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அவருக்காக நாடகக் கம்பெனிகளில் வாய்ப்பு கேட்டு அலைந்தார் சிட்னி, லண்டனில் இருந்த கர்னோ நாடகக் குழுவில் நடிப்பதற்கு சிட்னிக்கு முதலில் வாய்ப்பு கிடைத்தது, அதன் முக்கிய நடிகராக விளங்கினார்,

இதைப் பயன்படுத்திக் கொண்டு அவர் சார்லி சாப்ளி னைத் தன்னோடு நடிப்பதற்கு அழைத்துக் கொண்டார், பள்ளி சென்று முறையாகப் படிக்காத சார்லி சாப்ளினுக்கு நாடக வசனங்களை மனப்பாடம் செய்வது சிரமமாக இருந்தது,

சிட்னி தான் அவருக்கு வச்னங்களை சொல்லித் தந்து அவரை நடிக்க வைத்தவர், ஆனால் சாப்ளின் செய்யும் வேடிக்கைகளும், அவரது இயல்பான நகைச்சுவையும் சிட்னியை விட அவருக்கு பெயர் வாங்கி தந்தது,

அமெரிக்கா சென்று சாப்ளின் திரைப்படங்களில் நடிக்கத் துவங்கியதும் சிட்னி அவரது படங்களில் துணைக் கதாபாத் திரங்கள் ஏற்று நடிக்க ஆரம்பித்தார், தன்னால் ஒரு போதும் சார்லி சாப்ளின் போல புகழ் பெற முடியாது என்று உணர்ந்து கொண்ட சிட்னி, தன்னால் அடைய முடியாத வெற்றிகளை தனது சகோதரன் அடையட்டும் என்று சார்லியின் வளர்ச்சிக்குப் பாடுபடத் துவங்கினார்

அவரது இடைவிடாத முயற்சி தான் சாப்ளினுக்கு முக்கிய தயாரிப்பு நிறுவனங்களின் படங்களில் வாய்ப்புகளைப் பெற்று தந்தது. ஸ்டுடியோக் களிடம் சாப்ளின் சார்பாக அவரது மனேஜராக பேசி அவருக்கான வருவாயை உயர்த்தியவர் சிட்னி, அதில் ஒரு சாதனை போல அன்றைய திரையுலக வரலாற்றில் ஒரு நடிகருக்கு தரப்பட்ட அதிக பட்ச பணமாக ஒரு ஆண்டிற்கு 6,70000 ஆயிரம் டாலர் வருவாய் என்ற ஒப்பந்தத்தை வாங்கி தந்தவர் சிட்னியே, அவரது விடா முயற்சியின் விளைவே சாப்ளின் அடைந்த வெற்றிகள்,

ஆனால் பிரபலத்தின் நிழல் அவருக்கான எல்லா அடையா- ளங்களையும் மறையச் செய்துவிட்டது, தன்னைச் சந்திக்கின்ற ஒவ்வொருவரும் தான் சாப்ளின் சகோதரன் என்று மட்டுமே தன்னை நடத்துவது அவருக்குள் வருத்தத்தை உருவாக்கியது, இதற்காக விமான கம்பெனி முதல் பல்வேறு சிறிய பெரிய தொழில்கள் துவங்கி அதில் வெற்றி பெற முடியாமல் போனார் சிட்னி

சிட்னியின் குடும்ப வாழ்வும் வெற்றிகரமானதாகவில்லை, இரண்டு முறை திருமணம் செய்து கொண்டார், குழந்தை கள் இல்லை, மனைவி நோயாளி, ஆனால் தனது சொந்தத் துயரங்களை அவர் ஒரு போதும் பெரிது படுத்திக் கொள்ளவேயில்லை

சாப்ளின் தனது வாழ்க்கை வரலாற்று நூலில் தனது சகல வெற்றிகளுக்கும் சிட்னி ஒருவரே காரணம் என்று கூறுகிறார்,

சாப்ளினின் திரையுலக வளர்ச்சிக்கு உதவியதோடு மட்டுமல்லாது, சாப்ளினின் தனிப்பட்ட வாழ்வினையும் சிட்னியே நெறிப்படுத்தியிருக் கிறார், தீராக் காதலனைப் போல நான்கு முறை திருமணம், பனிரெண்டு பெண்களுடன் காதல் என்று உல்லாசமாக இருந்தவர் சாப்ளின், இதனால் உருவான சிக்கல்கள், சண்டைகள், நீதிமன்ற வழக்குகள், நஷ்ட ஈடுகள் அத்தனையையும் சமாளித்து சாப்ளினுக்குத் திரைப்படத்துறையில் அவப் பெயர் வந்துவிடாமல் காத்தவர் சிட்னி


சார்லி சாப்ளின்



சிட்னி சாப்ளின்

ஒருவேளை சிட்னி என்ற ஒருவரே இல்லாமல் போயிருந் தால் தான் லண்டனின் சேரிப் பகுதியில் ஒரு குற்றவாளியாக தான் ஆகியிருப்பேன் என்று ஒரு முறை சாப்ளின் நெகிழ்வுடன் நினைவு கூர்ந்தார்.

பிரபலத்தின் சகோதரனாக இருப்பது வெளிப்படுத்த முடியாத ஒரு வேதனை, நிச்ச யம் சிட்னி அதை அனுபவித் திருப்பார், எது தன்னை விட தனது சகோதர னைப் புகழ் பெறச் செய்தது என்ற கேள்வி அவருக்குள் எழுந்திருக்கும், தனது தோல்வியின் கசப்பை ஒவ்வொரு நாளும் அவர் உணர்ந்திருப்பார், ஆனால் அந்தக் கசப்பை ஒரு போதும் வெறுப்பாக மாற்றவில்லை, தனது வாழ்வை தனது சகோதரனின வெற்றிக்காக உருமாற்றிக் கொண்டார், அந்த நிலைப்பாட்டில் இருந்து கடைசி- வரை சிட்னி மாறவேயில்லை, சாப்ளின் இறந்த பிறகும் அவரது புகழ் பாடுவதில் சிட்னியே முன்னோடியாக இருந்தார்,

சிட்னி, சாப்ளின் இருவருக்குமிடையில் பலமுறை கருத்து வேறுபாடுகள், சச்சர வுகள் தோன்றியிருக் கின்றன, தனது ஸ்ரூடியோ நிர்வாகத்தை சிட்னி கவனிக்கக் கூடாது என்று சாப்ளின் கோபத்தில் கத்தியிருக் கிறார், ஆனாலும் தனது சகோதரனின் கோபத்தை சிட்னி ஒரு போதும் பெரிதுபடுத்தவேவில்லை,

சார்லி சாப்ளின் தனது புகழ்பெற்ற தி கிரேட் டிக்டேடர் படத்தின் சில காட்சிகளைக் கலரில் படமாக்கிப் பார்த்திருக் கிறார், அவற்றைப் படப்பிடிப்பு முடிந்தவுடன் அழித்துவிடச் சொல்லியிருந்தார் சாப்ளின், ஆனால் சிட்னி அவற்றை அழிக்க மனமின்றி படச்சுருள் களை முறையாகப் பாதுகாத்து வந்திருக்கிறார், தற்போது அந்தக் காட்சிகள் வெளியாகி உள்ளன

கிரேட் டிக்டேடர் போன்ற ஒரு படத்தை கலரில் காண்பது அற்புதமான அனுபவம், முழுப் படமும் இன்றுள்ள தொழில்நுட் பத்தைக் கொண்டு வண்ண மயமாக வெளியானால் பெரிய வசூலைப்பெறும் என்றே தோன்றுகிறது

சிட்னி பாதுகாத்து வைத்திருந்த அந்தக் காட்சிகள் "வுாந வுசயஜி யனெ வாந னுைஉவயவழச" என்ற டாகுமெண்டரியில் இடம்பெற் றுள்ளன, இப்படம் சாப்ளினு க்கும் ஹிட்லருக்குமான சில விசித்திர ஒற்றுமைகளை அடையாளம் காட்டுகிறது,

சிட்னி சாப்ளினைப் பற்றி நினைக்கும் போது எம்ஜிஆரின் சகோதரர் சக்ரபாணி, சிவாஜி யின் சகோதரர் சண்முகம் இருவரும் நினைவில் வந்து போகிறார்கள்,

சாப்ளினிடம் இயல்பாகவே திறமைகள் இருந்தன, ஆனால் அந்தத் திறமைகளை பணமாக மாற்றும் வித்தை சிட்னிக்கு மட்டுமே தெரிந்திருந்தது என்கி றார் கீஸ்டோன் ஸ்டுடியோ நிர்வாகி ஜான்பீல்டு, உண்மை யது, வெற்றி பெற்ற பலருக்கும் அவரது திறமைகளை அடை யாளம் கண்டு அதைப் பணமாக, புகழாக மாற்றிக் காட்டியவர் இன்னொருவரே.

# சிறையில் வாடும் 11 வயது கிறிஸ்தவ சிறுமி: பாகிஸ்தான் இமாம் கைது

புனித குர்ரானின் பக்கங்களை எரித்த குற்றச்சாட்டின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ சிறுமி தொடர்பான வழக்கில் பாகிஸ்தான் இமாம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் வசிக்கும் ரிம்ஷா மசி (வயது11) என்ற சிறுமி முஸ்லிம்களின் புனித குர்ரானின் பக்கங்களை எரித்ததாக சமீபத்தில் கைது செய்யப்பட்டாள். இது தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பாக மெஹ்ரியா ஜாஃபரில் உள்ள ஜாமாயா அமினியா மசூதியின் இமாம் காலித் சிஸ்டியை பொலிசார் கைது செய்தனர்.

ஹபீஸ்முகமது ஜுபைர் என்பவர் மாஜிஸ்திரேட் முன்பு அளித்த சாட்சியத்தின் பேரில் இமாமை




கைது செய்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர் இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், இமாம் சிஸ்டி, ரிம்ஷாவின் பையில் குரான் நூலின் சில பக்கங்களை வேண்டுமென்றே போட்டதாக ஹபீஸ் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். இதை அப்போதே பார்த்த ஹபீஸ், ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என கேட்டுள்ளார். அதற்கு கிறிஸ்தவ மதத்தினரை இந்தப் பகுதியிலிருந்து விரட்டுவதற்காக இப்படிச் செய்வதாக இமாம் கூறியதாக ஹபீஸ் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள இமாமுக்கு குர்ரான் அவமதிப்பு சட்டத்தின் கீழ் கடும் தண்டனை வழங்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராபர்ட் மெனன்டஸ், ராய் பிளன்ட், பென் கார்டின், மார்க் கிர்க், பாப் கசே, மைக் ஜோஹன்ஸ் ஆகியோர் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி ஸர்தாரிக்கு கடிதம் எழுதி உள்ளனர். அதில் பாகிஸ்தான் மக்களுக்கு வழங்கப்படும் சட்ட பாதுகாப்பு மற்ற சிறுபான்மை மதத்தவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

மத சகிப்புத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். சிறையில் வாடும் மனநிலை பாதிக்கப்பட்ட சிறுமியை விடுவிக்க ஜனாதிபதி ஸர்தாரி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.


# உலக பார்வை

## பிரபல பாடகியின் திருமணத்தில் மோதல்: மணமகள் மருத்துவமனையில் அனுமதி

பாகிஸ்தானின் பிரபல பாடகி ஆனி காலித் திருமணத்தில் பொலிசாருக்கும், மணமகன் வீட்டாருக்கும் இடையே மோதல் எழுந்தது.

பாகிஸ்தானிய பாடகி ஆனிக்கும், மாலிக் நவ்ரஸ் அவானுக்கும் லாகூரில் திருமணம் நடந்தது பஞ்சாப் மாகாண அரசு விதிமுறைப்படி இரவு 10 மணிக்குள் திருமண விழாவை முடிக்க வேண்டும். ஆனால் ஆனி திருமணத்தில் 10.30 மணியாகியும், ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தனஇதைக் கேள்விப்பட்ட பொலிசார் திருமண மண்டபத்துக்கு வந்து, நிகழ்ச்சிகளை முடித்து கொள்ளும் படி அறிவுறுத்தினர். ஆனால் மணமகன் வீட்டார் சிலர் பொலிசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து ஆனியின் மாமனாரை பொலிசார் கைது செய்



தனர். இந்த சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த ஆனி, தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து மணமகன் மாலிக், திருமண நிகழ்ச்சி தொடர்ந்து நடக்க பொலிசார் 15 இலட்ச ரூபாய் லஞ்சம் கேட்டனர். இதை நாங்கள் தர மறுத்ததால் அவர்கள், வாக்குவாதம் செய்தனர்.

திருமணமான முதல் நாளே ஆனி மருத்துவமனையில் இருப்பது வேதனையாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

# 1000 குழந்தைகள் ஊனத்துடன் பிறக்க காரணமான நிறுவனம் 50 ஆண்டுகள் கழித்து மன்னிப்பு கோரியது

கர்ப்பிணிகளுக்கு வழங்கிய மாத்திரையால் 1000க்கும் அதிகமான குழந்தைகள் ஊனத்துடன் பிறந்ததற்கு, 50 ஆண்டு கழித்து ஜேர்மனி மருந்து நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது.

ஜேர்மனியில் உள்ளது கிரனிதால் என்ற மருந்து நிறுவனம். கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் வாந்தி (மார்னிங் சிக்னஸ் என்கின்றனர்) போன்ற பிரச்னைகளுக்கு இந்த கம்பெனி "தலிடோமைட்" என்ற மாத்திரையை வெளியிட்டது.

கடந்த 1960ஆம் ஆண்டில் இந்த மாத்திரை 50 நாடுகளில் விற்கப்பட்டது. இதை சாப்பிட்ட கர்ப்பணிகளுக்கு குழந்தைகள் உடல் ஊனத்துடன் பிறந்தன. சுமார் 10 ஆயிரம் குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறந்ததாக



அப்போது தெரியவந்தது. அதன் பின் கடந்த 1961ஆம் ஆண்டு தலிடோமைட் என்ற மாத்திரை வாபஸ் பெறப்பட்டது. ஆனால் கர்ப்பிணிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து மருந்து நிறுவனம் நஷ்டஈடு எதுவும் வழங்கவில்லை. குறைந்தபட்சம் எதனால் அந்த மாத்திரை பின்விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை கூட தெரிவிக்கவில்லை. மன்னிப்பு கூட கேட்கவில்லை. இந்நிலையில் கிரனிதால் நிறுவன தலைமை நிர்வாகி ஹரால்ட் ஸ்டாக், கடந்த வெள்ளிக்கிழமை மன்னிப்பு கேட்டுள்ளார். ஆனால் தலிடோமைட் மாத்திரையால் பாதிக்கப்பட்ட பெண்களின் அறக்கட்டளை இதை ஏற்க மறுத்துவிட்டது. இந்த அறக்கட்டளை கூறுகையில் தலிடோமைட் மாத்திரையால் பாதிக்கப்பட்டவர்களை அவமானப்படுத்தும் வகையில் இப்போது மன்னிப்பு கேட்கின்றனர். அதற்கு பதில் உருப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.இவர்களை தொடர்ந்து ஹரால்ட் கேட்ட மன்னிப்பை பாதிக்கப்பட்ட பெண்களும் நிராகரித்து விட்டனர்.



ரஷ்யாவில் வரும் கல்வியாண்டிற்காக பள்ளிகள் திறக்கப்பட்டு வருகிறது, இதனையொட்டி தலைநகர் மொஸ்கோவில் உள்ள பள்ளி ஒன்றிற்கு விஜயம் செய்தார் அதிபர் விளாடிமிர் புடின். அருகில் மாஸ்கோ நகர மேயர் செர்ஜி சோபியானின் உள்ளார்.

# அப்ரிடிக்கு பதிலாக மற்றொரு கைதியை பரிமாறும் திட்டமில்லை

## பாகிஸ்தான் திட்டவட்டம்

சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த இடம் குறித்து அமெரிக்காவுக்கு தகவல் தெரிவித்த மருத்துவர் அப்ரிடிக்கு 33 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒசாமா பின்லேடன் அமெரிக்க சீல் படையினரால் கடந்தாண்டு மே மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதற்கு உறுதுணையாக இருந்ததாகக் கூறி ஷகீல் அப்ரிடிக்கு 33 ஆண்டு சிறை தண்டனையை பாகிஸ்தான் நீதிமன்றம் விதித்தது. இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

அதே சமயம் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய



தாக ஆஃபியா சித்திக் என்பவர் அமெரிக்காவில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தானில் வெள்ளிக்கிழமை இரவு நடந்த பாதுகாப்பு தின நிகழ்ச்சியில் பேசிய இஸ்லாம், கைதியை பரிமாற்றும் திட்டம் பாகிஸ்தானிடம் இல்லை. அப்ரிடிக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனையை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு நிலுவையில் உள்ளது என்றார்.இது குறித்து அமெரிக்க தூதரக செய்தித் தொடர்பாளர் ரியன் ஹாரிஸ் கூறுகையில், சித்திக்குக்குப் பதிலாக அப்ரிடி என்று பரிமாற்றிக் கொள்ளும் திட்டம் அமெரிக்காவிடம் எதுவும் இல்லை என்றார்.

# ஏலத்தில் பிரிட்டன் முன்னாள் பிரதமர் தாட்சரின் உடைகள்

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சரின் உடைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனில் கடந்த 1975ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்தவர் மார்கரெட் தாட்சர்.

கடந்த 1975ஆம் ஆண்டு கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து பிரதமராக பதவியேற்ற ஆரம்ப காலம் வரை அவர் பயன்படுத்திய ஆடைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவைகள் ஒவ்வொன்றிற்கும் 83



ஆயிரம் ரூபாய் முதல் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் வரை ஏலம் விட நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதன் முதலாக இவரின் உடைகள் ஏலம் விடப்படுவதால், தற்போதிலிருந்து கிராக்கி அதிகரித்துள்ளது.

# அறிவியல், மருத்துவத்தில் சிறந்து விளங்கும் சவுதி அரேபிய பெண்கள்

அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளில் சவுதி அரேபிய பெண்கள் சிறந்து விளங்குவதால் தான் அவர்களுக்கு உலகளாவிய ரீதியில் சுதந்திரம் கிடைத்துள்ளது என கல்ப் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

யுனஸ்கோ வெளியிட்ட அறிக்கையை மேற்கோள் காட்டி சமார் பாட்னி என்பவர் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், மேற்கத்திய நாட்டு பெண்களை காட்டிலும் சவுதி அரேபிய பெண்கள் அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளில் அதிக அளவில் பட்டம் பெறுகின்றனர்.

சவுதி அரேபியாவில் 40 சதவிகித மருத்துவர்கள் பெண்களே. அறிவியல் படித்த பெண்களில் பலருக்கு சிறந்த மருத்துவராகவும், விஞ்ஞானியாகவும் சர்வதேச அளவிலும் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# சர்ச்சைக்குரிய தீவை அளந்த ஜப்பான்: அதிர்ச்சியில் சீனா

சீனாவும், ஜப்பானும் உரிமை கொண்டாடும் பிரச்னைக்குரிய தீவில் ஜப்பானிய நில ஆய்வாளர்கள் சென்று அளவிடும் பணியை தொடங்கினர்.

பண்டை காலம் தொட்டு இந்த தீவு தங்கள் எல்லைக்குட்பட்டு இருப்பதாக சீனாவும், ஜப்பானும், உரிமை கொண்டாடி வருகின்றன.

பிரச்னைக்குரிய இந்த தீவில் மனித நடமாட்டம் கிடையாது. இந்த தீவைச் சுற்றிலும் எரிவாயு அதிகம் கிடைப்பதால் சீனா இந்த பகுதியைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்கிடையே கடந்த மாதம் 18ஆம் திகதி ஜப்பானிய ஆதரவாளர்கள் 150 பேர் இந்த தீவுக்குச் சென்று ஜப்பானிய கொடிகளை பறக்க விட்டனர். இந்த தீவில் ஜப்பான் சார்பில் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

# கல்யாண ராணிக்கு 10 வயது குழந்தை உள்ளதாகத் திடுக்கிடும் தகவல்



பல வாலிபர்களுடன், நெருக்கமாகப் பழகி, அவர்களை திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றி, நகை, பணத்துடன் மாயமான, கேரள அழகி சகானாஸ், நேற்று பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். தற்போது, ஆறு மாத கர்ப்பிணியாக உள்ள அவரின் குழந்தைக்கு, தந்தை யார் என்ற சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கேரள மாநிலம், பத்தனம் திட்டா மாவட்டத்தைச் சேர்ந்தவர், 'ானு வேல் என்ற சகானாஸ், 25. சென்னை உட்பட, பல இடங்களில், ஆண் நண்பர்களுடன் நெருக்கமாக பழகி, அவர்களை ஏமாற்றி, நகை மற்றும் பணத்துடன், இவர் மாயமானதாக, சென்னை மாநகர பொலிசில், ஏராளமானவர்கள் புகார் செய்தனர்.

அடையாறு உதவி கமிஷனர் மோகன்ராஜ் தலைமையிலான தனிப்படை பொலிசார், பாதிக்கப்பட்ட வாலிபர்களை, நேரில் அழைத்து விசாரித்தனர்.

அதில், புளியந்தோப்பைச் சேர்ந்த பிரசன்னா என்ற வாலிபருடன் மட்டும், சகானாஸ் அலைபேசியில், தொடர்ந்து பேசி வந்த விவரம் தெரிய வந்தது. ஒரு கட்டத்தில், அலைபேசியில் பேச, பணம் இல்லாமல் தவித்த சகானாசின் அலைபேசிக்கு, சென்னையில் இருந்த பிரசன்னா, "இ - ரீசார்ஜ் மூலம் பணத்தைச் செலுத்தினார். அலைபேசி கோபுரம் மூலமாக, அவர் பெங்களூருவில் மறைந்திருப்பது, பொலிசாருக்கு தெரியவந்தது. அங்கு சென்ற பொலிசார், அவரது அலைபேசி இயங்கிய பகுதியில் உள்ள விடுதிகளில் விசாரித்தனர். அப்போது, பெங்களூர் மெஜஸ்டிக் பஸ் நிலையத்தில் நின்றிருந்த சகானாசை, நேற்று முன்தினம் இரவு, பொலிசார், கைது செய்து, சென்னைக்கு அழைத்து வந்தனர்.

சகானாஸ், பொலிசாருக்கு அளித்த பரபரப்பு வாக்குமூலத்தின் முழு விவரம்: கேரள மாநிலம், பத்தனம் திட்டா மாவட்டம், ...லஞ்சூர் போஸ்ட், புத்தன் வீடு என்ற பகுதியில், வசித்து வந்தேன். என் தாயின் நடத்தை சரியில்லாததால், தந்தை இஸ்மாயில் எங்களை விட்டு விலகினார். நான், 10ஆம் வகுப்பு படித்த போது, கேரளாவைச் சேர்ந்த சித்திக் என்பவருடன், திருமணம் நடந்தது. படிப்பை தொடர்ந்து, பிளஸ் 2 முடித்தேன். அதன்பின், சித்திக் உடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தேன். சித்திக்குடன் குடும்பம் நடத்தியதில், ஒரு பெண் குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு தற்போது, 10 வயது ஆகிறது.சித்திக்கை பிரிந்து, அனாதையாக இருந்த நான், கேராளாவில் உள்ள துணிக்கடையில், வேலை செய்தேன். 2005 ஆம் ஆண்டு, பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, சென்னை வேப்பேரியில் உள்ள, சம்சுதீன் என்பவரின் சூப்பர் மார்க்கெட்டில் வேலைக்கு சேர்ந்தேன்.விழா ஒன்றில், சினிமா இணை இயக்குனர் ராகுல் என்பவருடன், பழக்கம் ஏற்பட்டது. சினிமா நடிகை போல் இருப்பதாகக் கூறிய ராகுல், என்னை சினிமாவில் நடிக்க வைப்பதாகக் கூறினார். அதனால், சூப்பர் மார்க்கெட் வேலையை உதறி விட்டு ராகுலுடன் சுற்றினேன்.

திருச்சியை அடுத்த வேப்பூரில், 2007ஆம் ஆண்டு, ராகுலை திருமணம் செய்து கொண்டேன். சென்னை வடபழனியில் நடந்த, எங்களது திருமண வரவேற்பில், சினிமா பிரபலங்கள் பலர் பங்கேற்றனர். ராகுலுடன் ஆறு மாதம் குடும்பம் நடத்திய பின், கருத்து வேறுபாட்டால் பிரிந்தேன். அதன் பின், மீண்டும் வேப்பேரியில், சம்சுதீனின் சூப்பர் மார்க்கெட்டிலேயே, வேலைக்கு சேர்ந்தேன். அவருடன் நெருக்கமாக பழகியதால், என்னை முழுமையாக நம்பினார். சென்னையில் வீடு வாங்க வேண்டுமெனக் கூறி, சம்சுதீனிடம் இருந்து, 1.85 இலட்ச ரூபாய் வாங்கினேன். பின், அவரிடம் இருந்து விலகி, பல வாலிபர்களுடன் பழகி, அவர்களிடம் இருந்து பணத்தைப் பிடுங்கி, ஏமாற்றினேன். என்னால் பாதிக்கப்பட்ட வாலிபர்கள், ஒருவருடன் ஒருவர் பேசி, என் மோசடியின் பின்னணியை, தெரிந்து கொண்டனர். கடந்த மாதம் 21ஆம் திகதி, திருவொற்றியூர் சரவணன், அடையாறு சரவணன், தி.நகர் ராஜா ஆகியோர், பொலிஸ் கமிஷனர் அலுவலகத்தில், என் மீது மோசடி புகார் கொடுத்தனர். அச்செய்தி, பத்திரிகைகளில் வெளியானவுடன், முகலிவாக்கத்தைச் சேர்ந்த மணிகண்டன், புளியந்தோப்பைச் சேர்ந்த பிரசன்னா ஆகியோர், திருமண போட்டோ ஆல்பத்துடன், கமிஷனர் அலுவலகத்தில் புகார் கொடுத்து விட்டனர்.

இதனால், பொலிசார் என்னை தேடத் துவங்கினர். சென்னையில், இருசக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணிந்து, சுற்றிக் கொண்டிருந்த நான், வேலூரில் உள்ள, தோழி பிரியாவின் வீட்டிற்குச் சென்று பதுங்கினேன். அவரின் உதவியுடன் ஆந்திரா சென்றேன் அங்கிருந்து, பெங்களூர் சென்று பதுங்கினேன். பிரசன்னா மட்டும், என்னுடன் தொடர்பில் இருந்தார். இவ்வளவு பிரச்னைக்கு பிறகும், பிரசன்னா என்னை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக, பேட்டி அளித்திருந்ததால், அவருடன் நம்பிக்கையாக பேசினேன். ஆனால், அவர் பெங்களூருவில் என் இருப்பிடத்தை காட்டிக் கொடுத்து, என்னை பொலிசில் சிக்க வைத்து விட்டார். இப்போது, நான் ஆறு மாத கர்பிணியாக உள்ளேன். என் குழந்தைக்கு பிரசன்னா தான் தந்தை. ஆனால், அவர் அதை ஏற்க மறுக்கிறார். இவ்வாறு, கேரள அழகி சகானாஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

# இந்திய செய்திகள்

## புனே புறநகரில் போதை விருந்து:

# 114 இளம் பெண்கள் உட்பட 325 பேர் கைது

மகாராஷ்டிரா மாநிலம் புனே புறநகர் பகுதியில் உள்ள ஹோட்டலில் போதை விருந்து நடப்பதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து புனே குற்றப் பிரிவு பொலிஸார் விரைந்து சென்று அதிரடியாகச் சோதனை நடத்தினர்.

அந்த ஹோட்டலில் ஏராளமான இளம் பெண்களும், வாலிபர்களும் போதையில் ஆட்டம் போட்டு கொண்டிருந்தனர்.

இதைத்தொடர்ந்து போதை விருந்தில் கலந்து கொண்ட 20, 25 வயதுடைய 325 பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் 114 இளம் பெண்கள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பெரும்பாலானோர் மாணவ- மாணவிகள் என்றும் சிலர் ஹிஞ்சேவாடி பகுதியை சேர்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணி செய்து வருபவர்கள் எனவும் தெரிய வந்தது.

கைதான 325 பேரையும் சாசூன் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

அவர்கள் மீது இந்திய தண்டனை சட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலும், மும்பை பொலிஸ் சட்டத்தின் கீழ் பொது இடத்தில் அமைதிக்கு பங்கத்தை ஏற்படுத்துதல் பிரிவிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இதேபோல ஹோட்டல் உரிமையாளர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.



கொங்கு நண்பர்கள் சங்கத்தின், 50ஆவது பொன் விழா ஆண்டையொட்டி கொங்கு மாமணி விருதை நடிகர் சிவகுமாருக்கு, சிலம்பொலி செல்லப்பனார் வழங்கினார். அருகில், தலைவர் பாலசுப்பிரமணி, செயலர் செல்வராஜ், பொருளாளர் ரமேஷ், துணை தலைவர்கள் கணபதி, சென்னியப்பன், சண்முகவேல் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# பிரதமர் மன்மோகன் சிங் கட்டாயம் பதவி விலக வேண்டும்: ரவிசங்கர்


நிலக்கரி சுரங்க ஊழலுக்கு பொறுப்பேற்று, பிரதமர் மன்மோகன் சிங், தன் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற, எங்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை, என, பா.ஜ., மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி சுரங்க ஊழலுக்கு பொறுப்பேற்று, பிரதமர் மன்மோகன் சிங், இராஜினாமாச் செய்ய வேண்டும் என, எதிர்க்கட்சியான பா.ஜ., வலியுறுத்தி வருகிறது. இந்தப் பிரச்னையால், கடந்த வாரம் முழுவதும், நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின.

இந்நிலையில், பா.ஜ., மூத்த தலைவர் அத்வானியின், இணையத்தளத்தில் நேற்று கூறியிருந்ததாவது: நிலக்கரி சுரங்க ஊழல் விவகாரத்தில், பா.ஜ., பிடிவாதமாக இருப்பதாகவும், தேவையில்லாமல் நாடாளுமன்றை முடக்குவதாகவும் புகார் கூறுகின்றனர். இந்த பிரச்னையை சுமுகமாக தீர்ப்பதற்கு, பா.ஜ., தயாராக உள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட சுரங்க உரிமங்கள் அனைத்தையும், இரத்துச் செய்ய வேண்டும். நிலக்கரி சுரங்க உரிமங்கள், எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன என்பது குறித்து, நீதி விசாரணைக்கும் உத்தரவிட வேண்டும். இந்த இரண்டு கோரிக்கையையும் நிறைவேற்றினால், நாடாளுமன்றை நடத்த, அரசுக்கு ஒத்துழைப்பு தர, பா.ஜ., தயாராக உள்ளது. இவ்வாறு அத்வானி கூறியிருந்தார்.

அத்வானியின் இந்த அறிவிப்பால், பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற, தங்களின் நிலையில் இருந்து, பா.ஜ., மேலிடம் இறங்கி வந்து விட்டதாக, தகவல் வெளியானது. ஆனால், பா.ஜ., செய்தி தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத், இதை மறுத்துள்ளார்.

# சாய்பாபா கோவில் காணிக்கை, தங்கம் விரைவில் ஏலத்தில்



மகாராஷ்டிர மாநிலம் ஷீரடியில் அமைந்துள்ள சாய்பாபா கோவிலுக்கு, பக்தர்கள் தங்கள் காணிக்கையாக தங்கம், வெள்ளி உள்ளிட்டவற்றை வழங்குகின்றனர். காணிக்கையாகப் பெற்ற இந்த தங்கம், வெள்ளி நகைகளை ஏலம் விட, கோவில் அறக்கட்டளை முடிவு செய்துள்ளது. இது குறித்து, கோவில் அறக்கட்டளை நிர்வாக அதிகாரி கிஷோர் மோரே கூறுகையில், கோவில் அறக்கட்டளை வசம், 280 கிலோ தங்கமும், 3,000 கிலோ வெள்ளியும் உள்ளன. இதில், 37 கிலோ தங்கமும், 516 கிலோ வெள்ளியும் உருக்குவதற்காக மும்பைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தங்கம், வெள்ளி, வைர நகைகள், அடுத்த மாதம் ஏலம் விடப்படும், என்றார்.

# புதுடெல்லியில் கலவரம்: பேருந்துக்குத் தீ வைப்பு

தலைநகர் புது டெல்லியில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நடந்த மோதலை தொடர்ந்து கலவரம் வெடித்தது.

நேற்று மாலை புதுடெல்லியில் உள்ள மயூர் விஹார்-3 பகுதியில் உள்ள சாலையில் டிராபிக் பொலிஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது வாகன ஓட்டி ஒருவர் ஹெல்மெட் அணியாமல் வந்தார்.

இதனால் டிராபிக் பொலிஸார் அவரிடம் கேள்வி எழுப்பினார். இதைதொடர்ந்து வாகன ஓட்டி அவ்வழியாக வந்த பேருந்து மோதி பலத்த காயமடைந்தார்.

படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிறிது நேரத்தில் அவர் மரணமடைந்ததாக எழுந்த வதந்தியை அடுத்து மயூர் விஹாரில் பதட்டம் நிலவியது.

இதனை தொடர்ந்து அங்கு பொலிஸ் - பொதுமக்களிடையே மோதல் முற்றி கலவரம் வெடித்தது.

பின்னர் பொதுமக்களால் ஏற்பட்ட கலவரத்தில் பேருந்துக்கு தீ வைப்பு, கடையடைப்பு சம்பவம் நிகழ்ந்தது.

இதனையடுத்து பொலிஸார் தடியடி நடத்தி கலவரத்தை ஒடுக்கினர்.

# தோழியின் அந்தரங்க படங்களை இணையத்தில் வெளியிட்டவர் கைது

தன் தோழியின் அந்தரங்க படங்களை இணையத்தில் வெளியிட்ட கல்லூரி மாணவி கொல்கத்தாவில் கைது செய்யப்பட்டார்.

கொல்கத்தாவில் உள்ள பிரபலமான கல்லூரி ஒன்றில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

கல்லூரியில் படித்து வரும் மாணவியின் உடல் அழகை அவரது தோழி விமர்சனம் செய்துள்ளார். இந்த விமர்சனத்தால் கவலையடைந்த அம்மாணவி, தன் தோழியின் அந்தரங்க படங்களை சேகரிக்கத் தொடங்கினார். இவ்வாறு நீண்ட நாட்களாக சேகரிக்கப்பட்ட இப்படங்களை இணையத்தில் வெளியிட்டார். இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த அந்த தோழி, பொலிஸாரிடம் புகார் தெரிவிக்க அம் மாணவி கைது செய்யப்பட்டாள்.

# பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி நான்கு கட்டங்களாக இம்மாதம் ஆரம்பம்

வலிகாமம்

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் இம்முறை நான்கு கட்டங்களாக நடைபெறுவதற்க்கான ஏற்பாடுகள் கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவனரால் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம்மாதம் ஆரம்பமாகும் போட்டிகளில் முதல் மூன்று கட்டங்களிலும் பெரு விளையாட்டுப் போட்டிகளும் நான்காம் கட்டத்தில் மெய்வன்மைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

முதல் கட்டப் போட்டிகள் 10, 11,12,13 ஆம் திகதிகளிலும் இரண்டாம் கட்டப் போட்டிகள் 15,16,17ஆம் திகதிகளிலும் மூன்றாம் கட்டப் போட்டிகள் 21, 22,23,24 ஆம் திகதிகளிலும் நான்காம் கட்டப் போட்டியான மெய்வன்மைப் போட்டிகள் ஒக்ரோபர் 09,10,11,12,13ஆம் ஆகிய ஐந்து நாட்களும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக வட மாகாணப் பாடசாலை அணி சார்பில் மெய்வனமைப் போட்டிகளுக்கு மட்டும் 350இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் வடமாகாண கல்வி அமைச்சினால் தயார் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இங்கிலாந்து பிறீமியர் லீக்: ஆர்சனல், யுனைட்டட் வெற்றி



இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் போட்டிகளில் ஆர்சனல், மன்செஸ்டர் யுனைட்டட் அணிகள் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டதோடு, நியூ காசில் அணிக்கும், அஸ்டன் வில்லா அணிக்குமிடையிலான போட்டி சமநிலையிலும் முடிவடைந்தது.

லிவர்பூல் அணிக்கும், ஆர்சனல் அணிக்குமிடையிலான ஆர்சனல் அணி 31ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது. அவ்வணி சார்பாக லூகாஸ் பொடோல்ஸ்கி முதலாவது கோலைப் பெற்றுக் கொடுக்க முதற்பாதியில் ஆர்சனல் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. அதன் பின்னர் போட்டியின் 68ஆவது நிமிடத்தில் சன்ரி கஷோர்லா ஆர்சனல் அணி சார்பான 2ஆவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். அதன் பின்னர் மேலதிக கோல்கள் பெற்றுக்கொள்ளப்படாது போக ஆர்சனல் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

நியூகாசில் அணிக்கும், அஸ்டன் வில்லா அணிக்குமிடையிலான போட்டி 1-1 என்ற கோல் எண்ணிக்கையில் சமநிலையில் முடிவடைந்தது. போட்டியின் 22 ஆவது நிமிடத்தில் அஸ்டன் வில்லா அணி சார்பாக சியரன் கிளார்க் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்து முதற்பாதியை அவ்வணி 1-0 என்ற கணக்கில் வசப்படுத்த உதவினார். எனினும் 60ஆவது நிமிடத்தில் நியூகாசில் அணி சாரபாக ஹற்றம் பென் அர்பா கோலொன்றைப் பெற்றுக் கொடுத்து கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தினார். அதன் பின்னர் கோல்கள் எவையும் பெறப்படாது போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கு, சௌதம்டன் அணிக்கு மிடையிலான விறுவிறுப்பான போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் அணி 3-2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இப்போட்டியில் சௌதம்டன் அணி சார்பாக றிக்கி லம்பேர்ட் 16ஆவது நிமிடத்தில் பெற்றுக்கொண்ட கோலின் உதவியுடன் சௌதம்டன் அணி ஆரம்ப முன்னிலையைப் பெற்றது. ஆனால் 23ஆவது நிமிடத்தில் மன்செஸடர் யுனைட்டட்டின் ரொபின் வான் பேர்சி கோலொன்றை அடித்து கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தினார். இதன் மூலம் முதற்பாதியில் இரு அணிகளும் தலா ஒரு கோலோடு சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதியில் 56ஆவது நிமிடத்தில் சௌதம்டன் அணி சார்பாக மோர்கன் ஸ்கெனெய்டெர்லின் கோலொன்றை அடிக்க சௌதம்டன் அணி 2-1 என்ற முன்னிலையை அடைந்தது. 69 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்ட்டி உதை வாய்ப்பை ரொபின் வான் பேர்சி தவறவிட, மன்செஸ்டர் யுனைட்டட் மீதான அழுத்தம் அதிகரித்தது.

ஆனால் சிறப்பாக மீண்ட ரொபின் வான் பேர்சி போட்டியின் 87ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்று கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தியதோடு போட்டியின் இறுதி நிமிடத்தில் இன்னுமொரு கோலைப் பெற்று ஹட் ட்ரிக் சாதனை படைத்ததோடு மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கு வெற்றியையும் பெற்றுக் கொடுத்தார்.

# அஜ்மலிடம் தடுமாறுகிறது ஆஸி. - வசீம் அக்ரம்



பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மலை எவ்வாறு ஆடுவது எனத் தெரியாமல் அவுஸ்திரேலிய அணி தடுமாறுவதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார். அத்தோடு சயீட் அஜ்மலைச் சிறப்பாக ஆட அவுஸ்திரேலிய அணி தடுமாறுவது பாகிஸ்தான் அணிக்கு அதிக வெற்றி வாய்ப்புக்களை வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அத்தொடரில் முதலாவது போட்டியில் வெற்றியடைந்திருந்த போதிலும் இரண்டாவது போட்டியில் தோல்வியடைந்திருந்தது. இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவதாகப் பந்து வீசும் போது அதிக பனி ஏற்பட்டதோடு, அதிக வெப்பம் காரணமாக அவுஸ்திரேலியப் பந்து வீச்சாளர்கள் தடுமாறியிருந்தனர்.

ஆனால் வசீம் அக்ரமைப் பொறுத்தவரை சயீட் அஜ்மலை அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் கணித்து ஆட முடியாமல் உள்ளமை பாகிஸ் தான் அணிக்கு அதிக வாய்ப்புக்களை வழங்குவதாகவுள்ளது.

அவுஸ்திரேலிய வீரர்கள் சயீட் அஜ்மலின் தூஸ்ராவைக் கணிக்க முடியாமலுள்ளனர் எனத் தெரிவித்த வசீம் அக்ரம், இந்நிலை பந்து வீச்சாளரின் தரத்தை வெளிப்படுத்துவதாக உள்ளதாகத் தெரிவித்தார்.

இதுவரை 2 போட்டிகளில் பெரிதளவில் ஓட்டங்களை விட் டுக் கொடுக்காத சயீட் அஜ்மல், 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இதற்கு அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் அஜ்மலைக் கணித்து ஆட முடியாததே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டி நாளைய தினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிஸ்டோரியஸ் புதிய சாதனை




லண்டனில் நடைபெற்று வரும் பாரம்லிம்பிக் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில், 2 கால்களை இழந்த தென்னாபிரிக்க வீரரான ஆஸ்கர் பிஸ்டோரியஸ் புதிய உலக சாதனை படைத்துள்ளார். லண்டனில் சமீபத்தில் முடிவடைந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்துக் கொண்டு, பார்வையாளர்களின் கவனத்தை இழுத்தவர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ் (25). பிறக்கும்போதே இவருக்கு இரண்டு கால்களும் இல்லை. இதனால் காலில் பைபர் பிராஸ்தெடிக் படடையை கட்டிக் கொண்டு ஓடினார். போட்டியில் வெற்றி பெறா விட்டாலும், அரங்கமே அவருக்கு எழுந்து நின்று பாராட்டு தெரிவித்தது.

"பிளேட் ரன்னர்" என்று பெயர் பெற்ற அவர், பாராலிம்பிக் போட்டியிலும் கலந்துக் கொண்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு நடந்த 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் அவர் கலந்துக் கொண்டார். இதில் போட்டி தூரத்தை 21.30 வினாடிகளில் கடந்து புதிய உலக சாதனை படைத்தார். இதற்கு முந்தைய உலக சாதனையை விட, இது அரை வினாடி குறைவாகும். இதற்கு முன்பு 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் உலக சாதனை படைத்தவர் பிரேசில் வீரர் ஆலன் போன்டெலஸ்.

# இந்திய அணிக்கு ஹர்பஜன் தேவை

- கும்ளே

சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கை அணியில் மீண்டும் சேர்க்க வேண்டுமென்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் அனில் கும்ளே கருத்துத் தெரிவித்துள்ளார்.

சுமார் ஓராண்டுக்கு மேலாக ஹர்பஜன் சிங்குக்கு இந்திய அணியில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அவருக்கு பதிலாக அஸ்வின், ஓஜா ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர்.


முழு உடல் தகுதியுடன் விளையாடத் தயாராக இருப்பதாக ஹர்பஜன் சிங் அறிவித்தார். எனினும் நியூஸிலாந்துக்கு எதிரான தொடரில் அவர் சேர்க்கப்படவில்லை. அதே நேரத்தில் 20 ஓவர் கிரிக்கெட் உலகக் கோப்பையில் பங்கேற்கும் இந்திய அணியில் அவர் இடம்பெற்றுள்ளார்.

எனினும் அவர் களமிறக்கப்படுவாரா என்ப திலும், டெஸ்ட் அணியில் சேர்க கப்படுவாரா என்பதிலும் சந்தேகம் நீடிக்கிறது.

இந்நிலையில் இது தொடர்பாக கும்ப்ளே கூறியது: இந்த ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் இந்தியாவுக்கு வருகின்றன. அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளரான ஹர்பஜன் சிங்கால் அந்த அணிக்கு எதிராக சிறப்பாக பந்து வீச முடியும் என்றார்.

பெங்களூரில் நடைபெற்று வரும் இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியில் கும்ளே வர்ணனை செய்தார். அப்போது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

# எஸ்.எல்.பீ.எல் போட்டித்தொடர் இலங்கைக்கு வெற்றி - ஆர்னல்ட்



இலங்கைக் கிரிக்கெட் சபையால் முதற்தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் போட்டிகள் வெற்றியடைநததாக இலங்கை அணியின் முன்னாள் வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ரசல் ஆர்னல்ட் தெரிவித்துள்ளார். எனினும் முன்னேற்றங்கள் தேவைப்படுவதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கையால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடர் கடந்த 11 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்தது. அத்தொடரில் ஊவா நெக்ஸ்ட் அணி சம்பியன் பட்டம் வென்றிருந்தது. அத்தொடருக்கான நேர்முக வர்ணனையாளர்கள் குழுவில் இடம் பெற்றிருந்த ரசல் ஆர்னல்ட், அத்தொடர் தொடர்பிலான தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பிறீமியால் லீக் தொடர் வெற்றியடைந்ததாகத் தான் கருதுவதாகத் தெரிவித்த ரசல் ஆரனல்ட், இன்னமும் முன்னேற்றங்கள் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார். இந்தியாவின் இந்தியன் பிறீமியர் லீக் தொடரோடு ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரை ஒப்பிட முடியாது எனத் தெரிவித்த அவர், ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடர் இலங்கைக்கானது' எனது எனத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடர் மூலம் இளைய வீரர்கள் நாட்டின் மிகச்சிறந்த வீரர்கள், வெளிநாடுகளிலிருந்து பங்குபற்றிய சிறந்த வீரர்கள் ஆகியோரோடு இணைந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்ததாகத் தெரிவித்த அவர், தங்களது திறமைகளை வெளிக் காட்டுவதற்கு இளைய வீரர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்ததாகத் தெரிவித்தார். அத்தோடு நிதி ரீதியாகவும் வெற்றிகரமானதாக அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

ரசிகர்கள் நேரடியாகச் சென்று போட்டிகளைப் பார்ப்பது குறைவாகக் காணப்பட்டது எனத் தெரிவித்த அவர், எனினும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் இற்கு ஏராளமான ஆதரவு கிடைக்கப்பெற்றதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 04.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது